
Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 16 | செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :170 வைகாசி 04 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 17 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2050

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்



2

அனைவரும் 2 மணித்தியாலங்களுக் கொரு முறை சரியான முறையில் 20 செக்கன்கள் வரை கைகளை சவர்க்கார மிட்டு கழுவுவோம்.

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

# மோசமான வானிலையால் தென்னிலங்கை தத்தளிப்பு!

- இருவர் உயிரிழப்பு: 5 பேர் காயம்
- 775 குடும்பங்கள் பாதிப்பு
- வீதிகள் துண்டிப்பு
- மின்சாரம் துண்டிப்பு





கொழும்பு, மே 17

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட இடரால் கேகாலை மாவட்டத்தில் இருவர் உயிரிழந் துள்ளார்கள். நாடு முழுவதும் 5 பேர் காய மடைந்துள்ளனர். 775 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 668 பேர் பாதிப்ப டைந்துள்ளனர். 45 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. 9 வீடு கள் முழுமையாகவும் 473 வீடுகள் பகுதி யளவிலும் சேதமடைந்துள்ளன. 02

## சூறாவளி இன்று வீசலாம் மக்களுக்கு எச்சரிக்கை!!!

*தாழமுக்கம் திருகோணமலையிலிருந்து 670 கி.மீ தூரத்தில் நேற்று மையம்*

கொழும்பு, மே 17

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு கடற்பிராந் தியத்தில் உருவாகியுள்ள தாழமுக்கம் அடுத்த 24 மணித்தியாலங்களில் சூறாவளியாக விருத்திய டையக்கூடும் என்று வளி மண்டலவியல் திணைக் களம் நேற்று மாலை எதிர்வுகூறியது. தாழமுக் கம் நேற்று 02

## நவாலியில் 11 பவுண் தாலி நேற்று அறுப்பு

யாழ்ப்பாணம், மே 17

மானிப்பாய் நவாலி சின்னப்பா வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணின் 11 பவுண் தாலிக்கொடி முச்சக்கர வண்டியில் வந்தவர்க ளால் அறுக்கப்பட்டுள் ளது. இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது. முச்சக்கர வண்டியின் இலக் கத்தை தாலியைப் பறி கொடுத்த பெண் குறித் தெடுத்துள் 02

## குடத்தனையில் நேற்று வீடுகள் மீது தாக்குதல்

*15 பேர் கொண்ட குழு அட்டகாசம்*

யாழ்ப்பாணம், மே 17

குடத்தனை மத்தியில் அமைந்துள்ள 30 வீடு கள் மீது நேற்று மாலை தாக்குதல் நடத்தப்பட்டுள் ளதாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

இரண்டு நபர்களுக்கு இடையில் நேற்றுமுன்தி னம் ஏற்பட்ட சண்டையே, இவ்வாறு குழு மோத லாக மாற்றம 02

## கொடிகாமத்தில் பெண் மீது கத்திக் குத்து

யாழ்ப்பாணம், மே 17

கொடிகாமம் பகுதியில் கணவன் மனைவி தக ராறை விலக்க முற்பட்ட மனைவியின் தங்கை கத்திக்குத்துக்கு இலக் கானார். கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டி யில் நேற்று மாலை 7.30 மணி 02

## ஒருவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணத்தில் 35 பேருக்கு நேற்று மேற்கொள் ளப்பட்ட சோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்;.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை 02

## கொரோனா 957

கொழும்பு, மே 17

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 22 பேர் நேற்று அடையாளம் காணப்பட் டுள்ளனர். தொற்றுக் குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 935 இலிருந்து 957 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுப் புதிதாக அடை யாளம் 02

## 'பார்கள்' பூட்டு

கொழும்பு, மே 17

மதுபானசாலைகள், மதுபான விடுதிகள் என்பன இன்று மூடப்பட்டிருக்கும். மீள திறப்பது பற்றி பின் னர் அறிவிக்கப்படும் என்று மதுவரித் திணைக்க ளம் அறிவித்துள்ளது. (ஓ.5)

## எமது பரிசோதனையிலிருந்து தப்பியவர்களும் இருக்கலாம்!

*அவதானம் தேவை என்கிறது தொற்றுநோய் தடுப்புப் பிரிவு*

கொழும்பு, மே 17

கொரோனா வைரஸ் சமூக பரவலாக இல்லை என்பதற்காக நாட்டில் முழுமை யாக கொரோனா தொற்றாளர்கள் இல்லை என்று அர்த்தம் கொள்ளமுடி யாது. எங்காவது ஒரு சிலர் எமது பரிசோ தனைகளில் இருந்து விடுபட்டு நோய் அடையாளம் காட்டப்படாது 02

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடரும் பொலிஸாரின் அடாவடி!



யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் வார நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களையும் அங்கு செய்தி சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்களையும் தொடர்ச்சியாக அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற் படுகின்றனர்.

முள்ளிவாய்க்கால் 02

## ஈழம் என்ற சொல்லால் அலறும் இலங்கை

கொழும்பு, மே 17

பிரிட்டனில் கார்டியன் பத்திரிகையில் ஈழம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில், பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகம் கரிசனை செலுத்தியுள்ளதாக, வெளிவிவகார அமைச்சு நேற்று இரவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02

## மோசமான...

கடந்த இரண்டு தினங்களாக தென்பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வீதிகளை மேவி வெள்ளம் பாய்கின்றது. போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் 45 ஆயிரம் குடும்பங்களுக்கான மின்சாரம் சீரற்ற வானிலை காரணமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டமே அதி உச்ச பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. அந்த மாவட்டத்தில் வட்டாரம ஹெல பகுதியில் நீரில் அடித்துச் செல்லப்பட்ட 48 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். வல்தெனிய பகுதியில் வீட்டின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் 65 வயது பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

கேகாலை அவிசாவளைசாலை பிரதான வீதியிலிருந்து கொட்டியாகும்புர பகுதி வரை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது, மேலும் சிறிய வாகனங்களை மாற்று வழிகளை பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்தமாவட்டத்தில் 568 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 868 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 9 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் 391 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியில் இருந்து நேற்று அதிகாலை 3 மணி வரையான காலப்பகுதியில் கேகாலை கலிகமுவ பகுதியில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அங்கு 212 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மேலும், இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, அம்பாந்தோட்டை, காலி, குருநாகல், மட்டக்களப்பு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

**மண்சரிவு**

நாட்டின் 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காலி, மாத்தளை, இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை, கொழும்பு, கேகாலை, குருநாகல் மற்றும் கண்டி மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**ஆறுகளின் நீர்மட்டம் அதிகரிப்பு**

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக களு கங்கை, களனி கங்கை மற்றும் ஜின் கங்கை மற்றும் அத்தனகல ஓயா ஆகியவற்றின் நீர்மட்டங்கள் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த ஆறுகளின் இரு மருங்கிலும் வசிக்கும் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த காலங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் இதே வார காலப் பகுதியில் தென்னிலங்கையில் இயற்கை இடர் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)

## கொடிகாமத்தில்...

யளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கந்தசாமி சசிகலா (வயது23) என்ற பெண்ணே காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஒ,5,26)

## ஒருவருக்கும்...

விடுதிகளில் சேர்க்கப்பட்டிருந்த 2 பேர், வெளிநோயாளர் பிரிவில் சோதிக்கப்பட்ட 6 பேர், வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 6 பேர், இரணைமடு தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 12 பேர், பலாலி தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 9 பேர் என்று 35 பேரின் மாதிரிகள் நேற்று சோதனைக்கு எடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் எவருக்கும் தொற்றில்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஒ,5)

## எமது...

சமூகத்தில் நடமாட வாய்ப்புகள் உள்ளது என்கிறது தொற்றுநோய் தடுப்புப் பிரிவு.

தொற்றுநோய் தடுப்புப்பிரிவின் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்ததாவது:

கொரோனா பரவல் இலங்கைக்குப் பெரிய அளவில் தாக்கங்களை செலுத்தாவிட்டாலும் கூட மீண்டும் மீண்டும் நோய் பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. விமான நிலையங்கள் மீள திறக்கப்படும் போதே மீண்டும் எவ்வாறான தாக்கங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும் என்று தெரியும். சமூகத்தில்நோய்பரவல்கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இப்போது வரையில் கடற்படையினர் மட்டுமே கொரோனாத் தொற்றுநோயாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அவர்களை தவிர்ந்து வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் மட்டுமே நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். பொதுமக்கள் எவரும் நோய் தாக்கத்துக்கு உள்ளாகவில்லை. ஆகவே இலங்கையின் நோய்த் தாக்கமானது எவ்வாறான தன்மையில் உள்ளது, எந்த திசையில் பயணிக்கின்றோம் என்பதெல்லாம் இதன் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது.

பொதுமக்கள் பாதிக்கப்படவில்லை, சமூக பரவல் இல்லை என்பதற்காக நாட்டில் முழுமையாக கொரோனா தொற்றாளர்கள் இல்லை என்ற அர்த்தம் கொள்ளமுடியாது. எங்காவது ஒரு சிலர் எமது பரிசோதனைகளில் இருந்து விடுபட்டு நோய் அடையாளம் காணப்படாது சமூகத்தில் நடமாடி வரலாம்.

ஆகவேதான் சமூக இடைவெளியை தொடர்ந்து கையாள வேண்டும் எனவும், அநாவசிய செயற்பாடுகளையும் தவிர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றோம். கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தொடர்ந்தும் அச்சுறுத்தல் உள்ளது. இப்போது இவ்விரு மாவட்டங்களும் ஊரடங்கின் கீழ் இருக்கின்ற போதிலும் மக்களின் செயற்பாடுகள் வழமையாகவே உள்ளது. எனவே மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். நாட்டில் மீண்டும் வைரஸ் தொற்றுநோய் உருவாக இடமளிக்காத வகையில் மக்களே செயற்பட வேண்டும் என்றார். (ஒ,5)

## ஈழம்...

அதில் கூறப்பட்டுள்ளதாவது,

பிரிட்டனில் நேற்று முன்தினம் 15ஆம் திகதி த கார்டியன் செய்திப் பத்திரிகையின் இணையத்தளப் பதிப்பில் வெளியிடப்பட்ட 'சுற்றுலா வினா விடைப் போட்டி: ப்ரைடே மேன், உங்கள் தீவுகளை உங்களுக்குத் தெரியுமா?' எனத் தலைப்பிடப்பட்ட வினா விடைப் போட்டி தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்துகின்றது.

இந்தப் போட்டியின் இரண்டாவது வினா, 'ஈழம் என்பது எந்தப் பிரபலமான விடுமுறைத்தீவின்பூர்வீகப்பெயர்?' எனும் வகையில் வினவுவதாக அமைந்துள்ளது.

இந்த வினாவுக்கான பதில் தெரிவுகளில் ஒன்றாக இலங்கையும் பட்டியலிடப்பட்டுள்ளதுடன், ஒருவர் இலங்கையை பதிலாகத் தேர்ந்தெடுத்து, அதை சரியான பதிலாகக் குறிப்பிடுகையில், 'இந்தத் தீவின் அண்மைய இராணுவக் கிளர்ச்சியின் முழுப் பெயர் எல்.ரீ.ரீ.ஈ. தமிழீழ விடுதலைப் புலிகள்' எனும் மேலதிக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலின் தவறான தன்மை காரணமாக அதனை நீக்குமாறு கோரிக்கை விடுத்து பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் த கார்டியன் செய்திப் பத்திரிகையின் ஆசிரியருக்கு கடிதம் அனுப்பியுள்ளார், என்றுள்ளது. (ஒ,5)

## சூறாவளி...

மாலை திருகோணமலையிலிருந்து வடகிழக்கு திசையில் சுமார் 670 கிலோமீட்டர் தொலைவில் நிலைகொண்டுள்ளது.

இன்று வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து பின்னர் நாளை முதல் 20ஆம் திகதி வரை வடக்கு, வடகிழக்கு திசையில் திரும்பி மேற்கு வங்காள கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்தத் தாக்கம் காரணமாக நாடு முழுவதும், குறிப்பாக நாட்டின் தென்மேற்கு பகுதியில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை தொடர்ந்து நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சில இடங்களில் 150 மி.மீ க்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

பொத்துவிலிலிருந்து திருகோணமலை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 55-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள். (ஒ,5)

## முள்ளிவாய்க்கால்...

நினைவேந்தலை முன்னிட்டு மே மாதம் 13 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் நினைவு கூரல்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

முதல்நாள் நினைவேந்தல் யாழ்ப்பாணம் செம்மணியில் நடைபெற்ற போது அங்கு பொலிஸாரும் புலனாய்வாளர்களும்குவிக்கப்பட்டுபல்வேறு குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டது மட்டுமல்லாது அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டிருந்தது.

நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்த பொது மக்கள் அரசியல் பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை பொலிஸாரும் புலனாய்வாளர்களும் ஒளிப்படம் எடுத்திருந்தனர். பெயர் விவரங்களையும் பொலிஸார் பதிவு செய்ததுடன் தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவீர்கள் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இரண்டாம் நாள் நினைவேந்தல் நவாலியில் இடம்பெற்ற போதும் இதே போன்றே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. மேலும் நாகர் கோவிலில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்விலும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இதே வேளை முல்லைத்தீவில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்விலும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் கைது செய்யப்படுவீர்கள என மிரட்டலும் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலைமையில் நேற்றையதினமும் யாழில் மூன்று இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. நினைவேந்தல் நடைபெறும் இடங்களில் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டு அங்கு நின்றிருந்தவர்களின் விவரங்கள் பெறப்பட்டும் ஒளிப்படங்கள் எடுத்தும் நேரடியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

தமிழராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபி முன்பாக நேற்று இந் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றிருந்தது. அங்கு புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு நினைவேந்தலுக்கு வந்தவர்கள் கண்காணிக்கப்பட்டிருந்தனர்.

நினைவேந்தல் ஆரம்பமாகி நடைபெறுக் கொண்டிருந்த நிலையில் அங்கு வாகனமொன்றில் வருகை தந்த யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் வாகனத்தில் இருந்து இறங்கும் போதே தமது தொலைபேசிகளில் ஒளிப்படங்களை எடுத்தவாறு நிகழ்விடத்துக்கு வந்தனர்.

அங்கு கலந்து கொண்டவர்கள் உட்பட செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களையும் ஒளிப்படங்கள் எடுத்துக் கொண்டனர். ஊடகவியலாளர்களின் முகங்களுக்கு நேராக அருகில் வந்து தனது கைபேசியில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒளிப்படங்களை எடுத்துக் கொண்டார்.

ஒளிப்படங்களை பொலிஸார் நேரடியாக எடுத்துக் கொண்ட அதே நேரத்தில் அங்கு நின்றிருந்த புலனாய்வாளர்களும் ஒளிப்படங்களை எடுத்திருந்தனர்.

ஒளிப்படங்களை எடுத்து ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அங்கு நின்றிருந்தவர்களின் ஒளிப்படங்களை வைத்து வழக்குத் தொடரப் போவதாகவும் எச்சரிக்கையும் விடுத்துச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,20)

## கொரோனா...

காணப்பட்ட 22 பேரில் 12 பேர் கடற்படையைச் சேர்ந்தவர்கள் எனவும், இருவர் மியான்குளம் மற்றும் கந்தக்காடு ஆகிய தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 43 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 477 இலிருந்து 520 ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 949 பேரில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 428 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ,5,22)

## குடத்தனையில்...

டைந்துள்ளது.

குடத்தனை மத்தியில் அமைந்துள்ள 30 வீடுகள் மீது நேற்று மாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள்களில் வந்த 15 பேர் கொண்ட குழு ஒன்று இந்தத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. வாகனங்களுக்கும், வீட்டிலிருந்த பொருள்களுக்கும் சேதம் விளைவித்து விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் பருத்தித்துறைப்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஒ,5,26)

## நவாலியில்...

ளார். அந்த இலக்கத்தை மானிப்பாய் பொலிஸாருக்கு வழங்கியுள்ளார். பொலிஸார் முச்சக்கர வண்டிச் சாரதியைக் கைது செய்துள்ளனர். மேலும் இருவரைத் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5,26,105)

# எதிர்க்கட்சி உறுப்பினர்களை கைது செய்ய அரசு திட்டம்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு, மே 17**

**முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்தமை அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை. எதிர்காலத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் கைதுசெய்யப்படுவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.**



முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டதை அடுத்து, நேற்றுமுன்தினம் கொழும்பில் கூட்டுச் செய்தியாளர் சந்திப்பை நடத்திய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா, ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இந்தச் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த சம்பிக்க ரணவக்க தெரிவித்தாவது: முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து 2014 ல் அரசாங்கத்தை விட்டு வெளியேறிய அமைச்சர்களில் சேனாரத்னவும் ஒருவர். ராஜித சேனரத்ன 2014 இல் எடுத்த அரசியல் முடிவின் விளைவாக உயர் பதவிகளுக்குச் சென்ற சிலர் தற்போதைய அரசாங்கத்தின் கூட்டாளிகளாக மாறியிருப்பது எங்களுக்கு வருத்தமளிக்கிறது.

இதேவேளை எதிர்காலத்தில் கைது செய்யப்படவிருக்கும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியல் இருப்பதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியுள்ளார். நாங்கள் சிறைகளுக்குப் பழகிவிட்டதால் எதற்கும் பயப்படப் போவதில்லை.

ராஜித சேனாரத்னவின் கைது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என குறிப்பிட்ட சஜித் பிரேமதாச, ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோரும் ஜனநாயக வழிமுறைகள் மூலம் இந்த பழிவாங்கலுக்கு எதிராக நாங்கள் போராடுவோம் என்று தெரிவித்தனர். (எ)

## நீரில் மூழ்கி ஒருவர் சாவு

கொழும்பு, மே 17

கேகாலை, வத்தாராம ஹெல பகுதியில் நீரில் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று இடர் முகாமைத்துவமத்தியநிலையம் தெரிவித்துள்ளது.

48 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதேவேளை வல்தெனிய பகுதியில் வீடு ஒன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் 65 வயது பெண்ணொருவர் காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

## கொவிட் 19 நிதியத்துக்கு ரூ.27.7 மில்லியன் நன்கொடை

கொழும்பு, மே 17

கொவிட் 19 சுகாதார மற்றும் சமூகப்பாதுகாப்பு நிதியத்திற்கு வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கை தூதரக சேவை ஊழியர்கள் சங்கத்தின் ஊடாக 27.7 மில்லியன் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தொகையடங்கிய காசோலையை வெளியுறவுத் துறை அமைச்சின் செயலாளர் ரவினாத ஆரியசிங்கவன் ஊடாக ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் வழங்கி வைக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. நிதியுதவிக்கு மேலதிகமாக தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், வெப்பமானி, சோதனை உபகரணங்கள் உள்ளிட்ட மேலும் பல உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)



## வெளிநாட்டவர் 25 பேருக்கு டெங்கு

கொழும்பு,மே 17

இலங்கையில் தங்கியுள்ளவர்களில் சுமார் 25 வெளிநாட்டவர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சிவப்பிரகாசம் அனுஷாந்தன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். கொரோனா தாக்க நிலைமைக்கு மத்தியில், டெங்கு உள்ளிட்ட ஏனைய தொற்று நோய்கள் குறித்தும் பொது மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (க)

## மோதல் சம்பவத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 17

ஹொரணஅரமணாகொல்ல பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலை விடுதியொன்றில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் மற்றுமொரு நபர் பலத்த காயங்களுடன் ஹொரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர்கள் 33 மற்றும் 55 வயதுகளையுடைய ஹெட்டிபொல மற்றும் கேகாலை பகுதியில் வசித்து வந்தவர்கள் என்று தெரிவித்த பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய நபரொருவரை கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ப)

# தமிழினத்தின் விடுதலையை வென்றெடுக்காமல் ஓயோம்

## ஓர்மத்துடன் உறவுகளை அஞ்சலிக்குமாறு அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை அழைப்பு

யாழ்ப்பாணம்,மே 17

இந்த வலிமிகுந்த நாளில் எமக்கு முன்னால் உள்ள தடைகளை உடைத்தெறிந்து நெஞ்சுறுதி கொண்ட வேங்கைகளாக ஒட்டுமொத்த உலகத் தமிழர்களும் "மூச்சோடும் வீச்சோடும் விடுதலையை வென்றெடுக்கும் வரை ஒருபோதும் ஓயோம்" என்ற ஓர்மத்துடன் கொல்லப்பட்ட எமது மக்கள் மீதும் , எமது மண்ணின் விடுதலைக்காக இறுதிக் கணம் வரை போராடி தம்மை ஈகம் செய்த மாவீரர்கள் மீதும் உறுதியெடுத்து சுடர் ஏற்றுவோமாக. இவ்வாறு அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்தது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

2020 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதியுடன் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நடைபெற்று 11 வருடங்கள் நிறைவடைகின்றது. காலம்காலமாக சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடக்குமுறைகளுக்குள் ஈழத்தமிழினம் சிக்குண்டு பல்வேறு படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் . இத்தகைய இனப்படுகொலைகளின் உச்சம்தொட்டு ஈழத்தமிழர்கள் மிக மோசமாக 21 ஆம் நூற்றாண்டில் சர்வதேசம் பார்த்திருக்க முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட வலிநிறைந்த நினைவு நாளே இன்றாகும்.

கடந்த ஏழு தசாப்தங்களாக இலங்கை அரசின் இனப்படுகொலை நிகழ்ச்சி நிரலானது அப்பாவித் தமிழ் மக்களைப் பலவகையிலும் துன்புறுத்தி அவர்களை இடம்பெயர்ந்து வேறு பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடையவைத்தது. பல்லாயிரம் தமிழர்கள் ஏதிலிகளாக தமிழர் தாயகத்தை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். காணி அபகரிப்புகள், தமிழர் பிரதேசங்களில் புத்தர் சிலை நிறுவுதல் போன்ற கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாடுகள் சிறிலங்காவில் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

நிர்க்கதியாக்கப்பட்ட அப்பாவித் தமிழர்களின் மரணங்களுக்கு பொறுப்புக்கூறல் அல்லது நீதி வழங்கல் சிறிலங்காவில் திட்டமிட்டே நிராகரிக்கப்பட்டு வருகின்றது. ஆயுத மௌனிப்பின் பின்பும் நடைமுறையிலுள்ளத் தமிழ் தேசத்தின் தாங்கு தூண்களான நிலம், மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றை சிதைக்கும் இனவழிப்புச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறிவருகிறது.

ஈழத்தமிழர்களுக்கு நடந்த இன அழிப்பிற்கும் மற்றும் தொடரும் கட்டமைப்பு சார் இன அழிப்பைத் தடுப்பதற்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் அல்லது விசேட குற்றவியல் தீர்ப்பாயத்தில் சிறிலங்காவை பாரப்படுத்துவதற்கு உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்கவேண்டும். தமிழர்களின் அரசியல் அபிலாசைகளான தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்த் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்படுவதே தமிழர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான ஒரே வழியாகும்.

ஒற்றையாட்சிக்கான புதிய இடைக்கால அறிக்கையை தமிழர்கள் அடியோடு நிராகரித்து தமிழ்த் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்பட்ட தீர்வு வேண்டும் என்ற ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட மக்கள் சக்தியாக அணிதிரள்வோம் - என்றுள்ளது. (ப)

# ரவி கருணாநாயக்கவின் மனு மேலதிக விசாரணை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் பெப்பர்ச்சுவல் ஸ்ட்றெசரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோஸியஸ் உள்ளிட்ட 7 பேர் தாக்கல் செய்த மனு தொடர்பில் சட்டமா அதிபர் எதிர்வரும் ஜூன் மாதம் 19 ஆம் திகதி சமர்ப்பணம் முன்வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான எச்.எம்.டீ. நவாஸ் மற்றும் சோபித்த ராஜகருண ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த மனு மீதான மேலதிக விசாரணைகளும் குறித்த தினத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரண்டு பிணை முறி ஏலங்களின் மூலம், அரசாங்கத்துக்கு 51.98 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், நீதிமன்றம் தங்களுக்குப் பிடியாணை பிறப்பித்திருந்ததாக மனுதாரர்கள் அந்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தநிலையில், குறித்தபிடியாணையை சட்ட வலுவற்றதாக்குமாறு அவர்கள் அந்த மனுவின் மூலம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# டெங்கு அபாயமான இடமாக தென்மராட்சியில் மந்துவில்

## சுகாதாரப் பகுதியினர் அறிவிக்கவுள்ளனர்

சாவகச்சேரி, மே 17

**சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு உட்பட்ட மந்துவில் கிராமத்தில் டெங்கு நுளம்பு பெருக்கம், அதிகமாகக் காணப்படுவதால் அந்தப் பகுதியை டெங்கு அபாயப் பிரதேசமாக அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.**



வருடாந்தம் தென்மராட்சியில் மந்துவில் பகுதியிலேயே டெங்கால் அதிகம் பாதிப்பு ஏற்படுகின்றது. மூன்று தினங்களாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினர், மலேரியா தடுப்பு அலகினர் ஆகியோருடன் பூச்சியியல் உதவியாளர்கள் அந்தப் பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டனர்.
அங்கு டெங்கு நுளம்பு பெருகக்கூடிய பெருமளவு நீர்ஏந்து பொருள்கள் வீடுகளிலும் காணிகளிலும் காணப்பட்டன.
அங்குள்ள பற்றைப்பகுதிகள் அனைத்திலும் பொதுமக்களால் வீசப்பட்ட கழிவுப் பொருள்கள் நிறைந்து டெங்குக் குடம்பிகள் காணப்பட்டன.
டெங்குப் பரிசோதனைக் காலங்களில் மக்கள் தமது காணிகளில் காணப்படும் உக்கக்கூடிய மற்றும் உக்காத பொருள்களை அயலிலுள்ள பற்றைகளில் கொட்டுவதால் மழைக்காலங்களில் அங்கு டெங்கு நுளம்பு பெருகி மக்களை டெங்கு நோயாளிகளாக மாற்றுகின்றன.
இதனால் இந்தப் பகுதியை டெங்கு அபாயப் பிரதேசமாக அறிவித்து அனைவரும் ஒன்றிணைந்து பற்றைகளையும் அங்கு காணப்படும் கழிவுப் பொருள்களையும் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.
தென்மராட்சியில் மழை பெய்ததையடுத்து நாவற்குழி மற்றும் மந்துவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும் என்றும் காய்ச்சல் காணப்படின் கொரோனா அச்சத்தைத் தவிர்த்து அருகிலுள்ள அரச மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுமாறும் அறிவித்துள்ளனர். (த-9)

# பொருளாதாரத்தை வலுப்படுத்த வங்கிகள்தான் உதவவேண்டும்

## *வங்கியாளர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை*

கொழும்பு, மே 17

கொவிட் 19 நோய்த்தொற்றுக் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீண்டும் பலமாகக் கட்டியெழுப்புவதற்கு பாரம்பரிய சிந்தனைகள் மற்றும் கட்டமைப்பிலிருந்து விலகி பங்களிக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வங்கித் துறையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கொரோனாவுக்குப் பிந்திய பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டத்துக்கு வங்கித் துறையை பங்குதாரராக்கிக் கொள்ளுதல் மற்றும் அதன்போது வங்கித் துறையில் உருவாகியுள்ள பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.
கொரோனா வைரஸைக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க அரசுக்கு முடியுமாக இருந்தது. தற்போதுள்ள பெரிய சவால், வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே. ஆடைக் கைத்தொழிலை வழமை நிலைக்குக் கொண்டுவர நீண்டகாலம் செல்லும். சுற்றுலாத் துறையிலும் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இழந்த வருமானம் மற்றும் தொழில்கள் மிகப் பெரியவை. பழைய இறக்குமதி முறைமையை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது. நாம் உற்பத்திப் பொருளாதாரத்தில் கவனம் செலுத்தவேண்டும். அதற்காக செயற்றிறமாகப் பங்களிப்பதற்கு வங்கித் துறையினருக்கு முடியும் என்று அவர் தெரிவித்தார்.
மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யு.டீ. லக்ஸ்மன் உட்பட பிரதி ஆளுநர்கள், அரச மற்றும் தனியார் துறை வங்கித் தலைவர்கள் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.
தற்போதுள்ள முக்கிய தேவை உற்பத்திப் பொருளாதாரத்தை பலப்படுத்துவதே.
இதற்காக முதலிடக்கூடிய பல துறைகள் உள்ளன. தேயிலை உட்பட பெருந்தோட்ட கைத்தொழில், சிறிய மற்றும் நடுத்தர உற்பத்திகள், வீடுகள் மற்றும் ஏனைய நிர்மாணத் துறை, விவசாயத்துடன் தொடர்புடைய உற்பத்திகள் பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா, மிளகு போன்ற பயிர்கள் அவற்றில் சிலவாகும். இந்தத்துறைகளில் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக இலகுவான நிபந்தனைகளின் கீழ் கடன் வழங்குமாறு ஜனாதிபதி வங்கிச் சமூகத்திடம் கேட்டுக்கொண்டார்.
'வாகனங்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் போன்ற இறக்குமதிக்காக கடன் வழங்கி இலகுவாக இலாபமீட்டும் முறைமையை தொடர்ந்தும் பேண முடியாது. புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள முன்னுரிமைகளுக்கே அதிகம் கடன் வழங்கப்பட வேண்டும். விவசாயிகள் அதிக வட்டிக்கு வியாபாரிகளிடம் கடன் பெறுகின்றபோது அவர்கள் வியாபாரிகளால் சுரண்டப்படும் நிலைக்கு ஆளாகின்றனர். அது எல்லா வகையிலும் பாதிப்பானதாகும். பெரிய வியாபாரிகளுக்கு உதவுவதுபோன்றே சிறிய வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் வங்கிகள் உதவ வேண்டும்.
கடன் வழங்கியதன் பின்னர் அதன்மூலமாகப் பயன்பெறும் விதம் குறித்து தொடர்ந்தும் தேடிப்பார்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.
கடந்த காலங்களில் வங்கிகளிலிருந்து கடன்பெற்று அவற்றைத் திருப்பிச் செலுத்தாதவர்களில் அதிகமானவர்கள் ஏழைகளின்றி பணக்காரர்களே.
கலந்துரையாடலில் பங்குபற்றிய வங்கிப் பிரதிநிதிகள் பொருளாதார புத்தெழுச்சிக்காக அரசு முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் குறிப்பிட்டனர். அவர்கள் வங்கித்துறை முகம்கொடுத்துள்ள சில பிரச்சினைகளையும் முன்வைத்தனர். மத்திய வங்கியுடன் கலந்துரையாடி அவற்றைத் தீர்த்துக்கொள்ளவும் இணக்கம் தெரிவித்தனர்.
இந்தச் சந்திப்பில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர ஆகியோரும் பங்குபற்றினர். (த)



# வவுனியா நிலையத்திலிருந்து 180 பேர் விடுவிக்கப்பட்டனர்

வவுனியா, மே 17

வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமிலிருந்து 180 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வேலங்குளம் விமானப்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமுக்கு இரு வாரங்களுக்கு முன்னர் கடற்படையைச் சேர்ந்த குடும்பத்தினர் அழைத்து வரப்பட்டிருந்தனர்.
வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 400க்கும் மேற்பட்ட கடற்படை அலுவலர்களுக்கு கோரோனா தொற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
அவர்களின் உறவினர்கள் தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். வவுனியா வேலங்குளத்தில் அமைந்துள்ள குறித்த முகாமுக்குக் கடற்படை அலுவலர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களென 180 பேர் பேருந்துகளின் மூலம் அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.
பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்தநிலையில், கொவிட் 19 தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட 180பேர் அவர்களுடைய சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.
நீர்கொழும்பு, அநுராதபுரம், குருணாகல், பொல்காவல, ரப்பாவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்படை வீரர்களின் குடும்ப உறுப்பினர்களே இதன்போது விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-110)

# மாம்பழம், பலாப்பழங்கள் விற்பனையின்றி தேக்கம்

## *சந்தைகள் இயங்காமையால் இந்தநிலை; உற்பத்தியாளர்கள் கவலை*

சாவகச்சேரி, மே 17

கொரோனா ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதால் சந்தைகளின்றி தென்மராட்சியில் மாம்பழ வகைகள் மற்றும் பலாப்பழம் போன்றனவற்றைச் சந்தைப்படுத்த முடியவில்லை என்று பிரதேச பழவகை உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்தனர்.
கோடை காலத்தில் பிரதேசத்தில் உற்பத்தியாகும் மாம்பழ வகைகள் மற்றும் பலாப்பழங்களைச் சந்தைகளில் அதிக விலைக்கு விற்கமுடியும். வெளியூர் வியாபாரிகள் வாகனங்களில் வீடு தேடிவந்து பழவகைகளைக் கொள்வனவு செய்வர். கோடை கால பழவகைகளுக்குத் தனி கிராக்கி ஏற்படும் என்பதால் வருடாந்தம் உற்பத்தியாளர்கள் பெரும் லாபம் அடைவர்.
இந்தவருடம் கொரோனா தொற்றுக் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் பழவகைகளை விற்பனை செய்ய முடியாதுள்ளது. அயல் கிராமங்களில் வதியும் உறவினர்களுக்கே அவற்றை வழங்கிவருகிறோம்.
சாவகச்சேரி கொடிகாமம் சந்தைகள் மார்ச் 24 ஆம் திகதி தொடக்கம் மூடப்பட்டுள்ளன. இதனால் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம். என்று தெரிவித்தனர். (த-9)

# கொங்கிறீட் தட்டு இடிந்து வீழ்ந்ததில் சிறுவன் உயிரிழப்பு

பசறை,மே 17

வீட்டின் கொங்கிறீட்டிலான தட்டு இடிந்து வீழ்ந்ததில், அதில் சிக்குண்ட சிறுவன் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பசறை கொட்டமுதுன பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.
அதே இடத்தைச் சேர்ந்த 17 வயதுடைய ஆர்.எம். திசரகுமார என்ற சிறுவனே உயிரிழந்தார்.
சம்பவம் தொடர்பில் பசறை திடீர் மரண விசாரணை அதிகாரி டபள்யு. எம். ஏ. விக்ரமரட்ன விசாரணைகளை மேற்கொண்டார். நான்கு மாதங்களுக்கு முன்னர் இம் மாணவனின் தகப்பன் அதே வீட்டில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மஞ்சள், இஞ்சி உற்பத்திகள் மன்னாரில் கைகொடுக்கும்

## விவசாயப் பிரதிப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்

மன்னார், மே 17

**மன்னார் மாவட்டத்தில் மஞ்சள் மற்றும் இஞ்சி பயிர்ச்செய்கை மேற்கொண்டால் உற்பத்தியில் வெற்றிபெறமுடியும் என்று மாகாண விவசாயப் பிரதிப் பணிப்பாளர் கே.எம்.ஏ.சுகூர் தெரிவித்தார்.**

கொரோனா வைரஸ் தாக்கத்தின் பின்னர் நாடு முழுவதும் மஞ்சளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விலையும் அதிகமாகவுள்ளது.

எதிர்காலத்தில் மஞ்சளுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய மன்னார் மாவட்டத்தில் மஞ்சள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளலாமா? என்று கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் மஞ்சள், இஞ்சி ஆகியவற்றை பயிரிடமுடியும். அவற்றை இந்தமுறை எமது திணைக்களத்தினூடாகச் செய்வதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

மஞ்சள் செய்கை ஈரவலயமும் இன்றி உலர் வலயமுமின்றி இடைவலயம் என்ற காலநிலைப்பாகுபாடுக்குள் வளரும் பயிர்.

மன்னார் மாவட்டம் வறட்சியான வலயமாக இருப்பதால் நிழல் உள்ள பகுதிகளைத் தெரிவுசெய்து அல்லது வலை இல்லம் (நெற் ஹவுஸ்) உருவாக்கி மஞ்சள் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம்.

ஏனெனில், வலை இல்லம் எனப்படுவது நிலத்துக்கு வெயிலைக் குறைத்துக் கொடுப்பது.

இந்த முறைகளைப் பயன்படுத்தி மன்னார் தீவுக்குள்ளும் தீவுக்கு வெளியிலும் முசலி, கொண்டச்சி, மடுப்பகுதி, சன்னார், பெரியமடு, பாலம்பிட்டி, கீரிசுட்டான், பண்டிவிரிச்சான் போன்ற செம்மண் இருக்கின்ற அனைத்துப் பகுதிகளிலும் மஞ்சள் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும்- என்றார். (த-213)



# நினைவேந்தல்கள்

யாழ்ப்பாணம், மே 17

பொலிஸாரின் கெடுபிடிக்கு மத்தியில் முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் மூன்று இடங்களில் நேற்று நடைபெற்றன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த இடங்களில் அஞ்சலி செலுத்தியது.

1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி மண்டைதீவு கடற்பரப்பில் படுகொலைசெய்யப்பட்ட 31மீனவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு முன்பாகவும், 1993 ஆம் நாடு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் விமான குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்டோர் நினைவாக ஆலய முன்றலிலும், 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்ட 11 பேர் நினைவாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட நினைவிடத்திலும் ஈகைச்சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலின்போது வழமைபோன்று பொலிஸாரின் தலையீடு காணப்பட்டது. நினைவேந்தலில் ஈடுபட்டவர்களை பொலிஸாரும் புலனாய்வாளர்களும் தங்கள் அலைபேசிகளில் ஒளிப்படம் மற்றும் காணொலி பதிவுசெய்தனர். எனினும், அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. (த-7,20)

# ஊரடங்கு மீறல் நேற்று வரை 55,706 கைது

யாழ்ப்பாணம், மே 17

மார்ச் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் நேற்றுக்காலை 6 மணி வரையிலான காலப்பகுதியில் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் நாட்டில் 55ஆயிரத்து 706 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

குறித்த காலப்பகுதியில் 15ஆயிரத்து 216 வாகனங்களும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் 12ஆயிரத்து 482 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் 4ஆயிரத்து 808 பேருக்கு தண்டனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (த)

# கிராம அலுவலர் பிரிவுகளில் சுகநல மேம்பாட்டுக் குழுக்கள்

சாவகச்சேரி, மே 17

தென்மராட்சி பிரதேச செயலகபிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் கிராமிய மட்ட சுகநல மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரிவு கிராம அலுவலர் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர், அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், குடும்பநல அலுவலர், பொலிஸ் அலுவலர், படையினர், விவசாய விரிவாக்க அலுவலர் ஆகியோருடன் இயங்கும் விவசாய சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

பிரிவில் காணப்படும் டெங்கு, கொரோனா மற்றும் போதைப்பொருள் தடுப்பு மாணவர்களின் கல்வி, வறிய மாணவர்களுக்கு உணவு வழங்கல், வீட்டுத்தோட்டம், மக்கள் ஒருங்கிணைப்பு, பொது மலகூடம் அமைப்பது, மழைநீர் தேங்கி விடாமல் தடுப்பது, தாய்மார் கழகங்களின் செயற்பாடுகள் போன்றவை இந்தக் குழுவினரால் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதடி தெற்குப்பகுதி பிரிவுக்கான கிராமிய சுகநலம் மேம்பாட்டுக் குழு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரிவு ரீதியாக குழுக்கள் அமைக்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-9)



# 570 லீற்றர் கோடா 5 லீற்றர் கசிப்பு மீட்பு



வவுனியா, மே 17

வவுனியாவில் 5 லீற்றர் கசிப்பு மற்றும் 570 லீற்றர் கோடா என்பனவற்றை மீட்டதோடு அவற்றை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வன்னிப் பிராந்திய போதை ஒழிப்புப்பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த விசேட தகவலையடுத்து வன்னிப் பிராந்திய போதை ஒழிப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஜெகத் மல்வராய்ச்சி தலைமையிலான பொலிஸ் குழுவினர் வவுனியாவின் தவசிகுளம் பகுதிகளில் நேற்று சனிக்கிழமை அதிகாலை மேற்கொண்ட திடீர் சோதனையில் இவை கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

தவசிகுளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து 2.5 லீற்றர் கசிப்பு, 380 லீற்றர் கோடா மற்றும் இரண்டு பெரல்கள் என்பன மீட்கப்பட்டன. இங்கு ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பகுதியிலுள்ள பிறிதொரு வீட்டிலிருந்து 2.5 லீற்றர் கசிப்பு, 190 லீற்றர் கோடா, ஒரு பெரல் என்பன மீட்கப்பட்டன. இங்கு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

53 மற்றும் 46 வயதுடைய சந்தேகநபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-18)

# விடுவிக்கப்பட்ட காணிகளில் மரங்களையாவது நடுங்கள்

## தாம் செழிப்பாக வைத்திருந்தோம் என்றும் கூறுகின்றார் யாழ்.கட்டளைத் தளபதி

யாழ்ப்பாணம், மே 17

"படையினரால் காணிகள் விடுவிக்கப்பட்டனவெனினும், அவற்றின் உரிமையாளர்கள் பலர் மீள்குடியமரவில்லை. இது கவலையளிக்கிறது. படையினர் வசமிருக்கும்போது செழிப்பாக இருந்த காணிகள் தற்போது பற்றைக்காடுகளாகவுள்ளன. அவர்கள் குடியமராவிடினும், தத்தம் காணிகளில் பயன்தரு மரங்களை நட்டு பயன்பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்"

இவ்வாறு தெரிவித்தார், யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல் வணிகசூரிய.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு தியாகி அறக்கட்டளையால் வீடு ஒன்று அமைத்து நேற்றுக் கையளிக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கருத்துரைக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்ப்பாண மாவட்டத்தில் முப்படையினர் வசமிருந்த பெருமளவு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. அவை உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. தற்போது இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியன பொதுமக்களின் மிகக் குறைந்தளவான காணிகளிலேயே முகாம்கள் அமைத்துள்ளன.

எனினும், விடுவிக்கப்பட்ட காணிகள் பலவற்றில் மக்கள் மீள்குடியமரவில்லை. அவர்களின் காணிகள் படையினரிடமிருக்கும்போது செழிப்பாக இருந்தன. இப்போது பராமரிப்புகளற்று பற்றைக் காணிகளாக உள்ளன.

எனவே மக்கள் தற்போது மீள்குடியமராவிடினும் காணிகளை பராமரித்து பயன்தரும் மரங்களை நட வேண்டும். தென்னை மரங்களை நடுவதனால் சில வருடங்களில் கூடியளவுபயன்பெற முடியும்- என்றார். (த-111)

# மக்களின் உயிரை பணயமாக்கி தேர்தலை நடத்த அரசு முயற்சி!

## சஜித் அணி கடும் கண்டனம்



**கொழும்பு, மே 17**

**“கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்கு அதிக முக்கியத்துவம் வழங்காமல் மக்களின் உயிரைப் பணயம் வைத்தேனும் பொதுத்தேர்தலை நடத்துவதுதான் அரசின் அரசியல் நிகழ்ச்சி நிரலாக உள்ளது” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர்ரஞ்சித்மத்துமபண்டாரகுற்றஞ்சாட்டியுள்ளார்.**

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் குதிரை ஓடிய பிறகு லாயத்தை பூட்டுவது போல்தான் அரசின் பொறிமுறை அமைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் சீனாவில் வேகமாகப் பரவ ஆரம்பித்தபோது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் எச்சரிக்கையைச் சுட்டிக்காட்டி, இந்த சவாலுக்கு முகங்கொடுக்க நாட்டைத் தயார்படுத்த வேண்டும் என்று சஜித் பிரேமதாச கடந்த ஜனவரி 27 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். சுகாதார அமைச்சர் உட்பட மேலும் சில அமைச்சர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுக்கவில்லை.

இலங்கையில் முதலாவது நோயாளியாக சீனப்பெண்ணொருவரே அடையாளம்காணப்பட்டார். குறைந்த பட்சம் அதன் பின்னராவது விமான நிலையத்துக்கு வருபவர்கள், செல்பவர்களின் உடல் உஷ்ணத்தை உரியவகையில் அளவிட்டிருந்தால் இப்போது இந்தநிலைமை ஏற்பட்டிருக்காது.

சீன பெண் குணமடைந்த பின்னர், ஏப்ரல் 19 ஆம் திகதி கொரோனா கட்டுக்குள் வந்துவிடும் என்று எவ்வித அடிப்படையும் இன்றி சுகாதார அமைச்சர் கருத்து வெளியிட்டார். வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அரசுதேர்தலை இலக்குவைத்து செயற்பட்டதால் மக்களுக்கே பாதிப்பு ஏற்பட்டது. வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நீங்கிய பின்னர் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார். தற்போதைய சூழ்நிலையில் தேர்தலைக் காட்டிலும் எமக்கு மக்களின் உயிரே முக்கியம்.” -என்றார். (து-44)

# கடலலை ஏற்படாது பயம் வேண்டாம்!

## அம்பாறை மாவட்ட இடர் முகாமைப்பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, மே 17

கிழக்கு மாகாணத்தின் கடற்கரையை அண்டிய பல பகுதிகளில் கிணறுகள் வற்றுகின்றன என்றும் இதனால், சுனாமி போன்று கடலலை ஏற்படுமா என்று மக்கள் அச்சத்திலுள்ளனர்.

எனினும், இந்த விடயத்தில் மக்கள் பீதியடையத் தேவையில்லை. இது சாதாரணமாக நிகழ்கின்ற ஒரு விடயம் என்று அம்பாறை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது போன்ற நிலைமைகள் 2018 ஆம் ஆண்டு ஏற்பட்டன. ஆனால் அபாய நிலைமைகள், இடர்களெதுவும்ஏற்படவில்லை. எனவே இது தொடர்பாக மக்கள் அச்சமடையத்தேவையில்லை. இது இடர் நிலைமைகள் ஏற்படுவதற்கான ஒரு நிலைமையும் அல்ல. வதந்திகளைப் பரப்பவோ, நம்பவோ வேண்டாம். தற்போது இலங்கையில் தாழமுக்க நிலை காணப்படுவதால் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் உயரமான கடல் அலைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன - என்றார். (து)



# 10அடிக்கு தேங்கினால்தான் மேலதிக பயிர்ச்செய்கை

## மன்னார் கட்டுக்கரைக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவிப்பு

மன்னார், மே 17

மன்னார் கட்டுக்கரைக்குளத்தில் பத்து அடி உயரத்துக்கு தண்ணீர் வந்தால் மட்டுமே சிறுபோகத்தில் மேலதிக நிலத்தில் பயிர்ச்செய்கை செய்வது பற்றித் தீர்மானிக்கப்படும் என்று முருங்கன் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அருள்ராஜ் தெரிவித்தார்.

கட்டுக்கரைக் குளத்துக்கு தண்ணீர் வரத்து அதிகமாக இருப்பதால் சிறுபோக பயிர்ச்செய்கைக்கு மேலதிக நிலங்களைப் பங்கிட்டுத்தருமாறு விவசாயிகள் சிலர் கோரிக்கை விடுத்திருந்தனர். இது தொடர்பாகக்கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பதினோராம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தில் சிறுபோக பயிர்ச்செய்கை தொடர்பில் விவசாய அமைப்புகளுடன் கூட்டம் நடைபெற்றது. கட்டுக்கரையில் தண்ணீர் பற்றாக்குறை காணப்பட்டதால் சிறுபோகத்தில் ஆயிரத்து 250 ஏக்கரில் நெல்லும், 400 ஏக்கரில் சிறுதானியங்களும் பயிர் செய்வது என்று தீமானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது கட்டுக்கரைக்குளத்தில் எட்டு அடி ஆறு அங்குலம் அளவே தண்ணீர் வரத்து உள்ளது. எனினும், பத்து அடி அளவுக்குத் தண்ணீர் நிரம்பினால்தான் மேலதிக பயிர்ச்செய்கை பற்றித் தீர்மானிக்கலாம் - என்றார்.

எதிர்வரும் 21ஆம் திகதி சிறுபோக பயிர்ச்செய்கைக்காக கட்டுக்கரைக் குளத்திலிருந்து தண்ணீர் திறக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (து-213)

# முல்லைத்தீவில் 650 ஏக்கரில் நீர்பாசன விவசாயத் திட்டம்

## பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் உலக வங்கியின் நிதிஉதவியுடன் காலநிலைக்கு சீரான நீர்பாசன விவசாயத் திட்டத்தின் ஊடாக 650 ஏக்கர் வரையில் மேட்டு நிலப் பயிர்செய்கைக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கி வைக்கப்பட்டன என்று முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பி.உகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை ஊக்கிவிக்கும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. உலக வங்கியின் நிதி அனுசரனையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறப்பான விவசாய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டன.

முள்ளிவளை, ஜயன்கன்குளம், கோட்டைகட்டியகுளம், கணேசபுரம், முத்தையன்கட்டு, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், தண்டுவான், புளியங்குளம், தச்சடம்பன், மந்துவில், கேப்பாபுலவு, போன்ற விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயச் செய்கையாளர்களுக்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. உழுந்து 320 கி.கிராம்,பயறு 390 கி.கிராம், மிளகாய் 16 கி.கிராம், குரக்கன் 16.8 கி.கிராம், எள் 14 கி.கிராம், சின்னவெங்காயம் 8000 கி.கிராம், நிலக்கடலை 20,000 கி.கிராம், கௌப்பி 487 கி.கிராம் வழங்கி வைக்கப்பட்டன. இந்த உள்ளீடுகள் மொத்தமாக 650 ஏக்கர் பரப்பில் பயிரிடப்படவுள்ளன- என்றார். (ஐ-19)

# அரச அறிவிப்பை மீறி கடன்கள் அறவீடு

## கிராம மக்களே பெரும் அவதி

வவுனியா, மே 17

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள நுண்நிதி நிறுவன ஊழியர்கள் கடன்வசூலிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். இதனால் கிராமப்புற மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 11 ஆம்திகதி தொடக்கம் நாட்டை வழமைக்குக் கொண்டுவரும்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டிருந்தது. அது தளர்த்தப்பட்டநிலையில் நுண்நிதி நிறுவன ஊழியர்கள் கிராமங்களுக்குச்சென்று மக்களிடம் கடன் வசூலிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

எனினும், அன்றாடம் தொழில்செய்து வாழ்வை ஓட்டிவரும் மக்களே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டே கடன்வசூலிக்கும் நிறுவனங்கள், வங்கிகள் கடன்களை தற்போதைக்கு அறவிடக்கூடாது என்று அரசு அறிவித்துள்ளது. ஆனாலும், அதனையும் மீறி கடன்களை அறவிடுவதில் வங்கிகள், நிதிநிறுவனங்கள் தீவிரமாகவுள்ளன.

இதனால் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றோம் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

தம்மிடம் அறவிடப்படும் கடன் பணத்துக்கு கால அவகாசம் ஒன்றை வழங்கவேண்டும் என்றும் அவர்கள் அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (து-110)

# துப்பாக்கிச் சூட்டில் பெண் சாவு

கொழும்பு, மே 17

கட்டுநாயக்க, மகாகம பகுதியில் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண் கட்டுநாயக்க, மகாகம பகுதியில் வசிக்கும் 38 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து)

# மியன்மாரில் சிக்கியிருந்த 74 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, மே 17

கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக மியன்மாரில் சிக்கியிருந்த 74 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர். ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விசேட விமானத்தின் ஊடாகவே அவர்கள் அனைவரும் நாடு திரும்பியதாக விமான நிலையச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், தாயகம் திரும்பிய இவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்



நெடுங்குளம், புன்னாலைக்கட்டுவன், வேலணை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 40 குடும்பங்களுக்கு புலம்பெயர்ந்து இத்தாலியில் வசித்துவரும் மகேஸ்வரநாதன் கிருபாகரன் என்பவரின் நிதி உதவியில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)





கொழும்புத்துறை மத்தி கிராமசேவகர் பிரிவு ஜே/62இல் உள்ள பெண் தலைமைத்துக் குடும்பங்களும், வறிய நிலையில் வசிக்கும் குடும்பங்களுக்கும் யோகர் சுவாமி ஆச்சிரமத்தின் நிதிப் பங்களிப்பில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. 40 குடும்பங்கள் இதில் பயன்பெற்றன. (ம-ந)



கொரோனாவால் தொழில்களை இழந்து தவிக்கும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மந்துவில், மல்லிகைத்தீவு கிராம அலுவலர் பிரிவில் 100 குடும்பங்களுக்கு, யாழ்ப்பாணம் சென்.ஜோசப் மக்கள் பேரவையால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (து)




வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட புளியங்குளம் லைகா ஞானம் கிராமத்தில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள 82 குடும்பங்களுக்கு செரண்டிப் சிறுவர் இல்லத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





யாழ் களரியின் 'பாசம் பகிரும் பயணம்' திட்டத்தின் ஊடாக மலையக மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம)





விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் 50 குடும்பங்களுக்கு வித்தியாலயத்தின் அபிவிருத்தி சங்கத்தினூடாக உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



வித்தியானந்தா கல்லூரியின் பழைய மாணவர்சங்க சுவீஸ் கிளை அமைப்பின் நிதியில், முள்ளியவளை, தண்ணீரூற்று, பூதன்வயல், வற்றாப்பளை ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 75 பயனாளிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)






மக்களைப் பாதுகாக்கும் உயரிய பணியில் ஈடுபட்டுள்ள வைத்தியசாலைப் பணியாளர்களுக்கும், அத்தியாவசிய சேவையில் தொடராக ஈடுபடும் பணியாளர்களுக்கும் உதவுமுகமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் முகக் கவசங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூன்றாம் கட்டமாக வடக்கு கிழக்கில் உள்ள பல்வேறுபட்ட மக்கள் பணியில் தம்மை ஈடுபடுத்தியுள்ள திணைக்களம் சார்ந்த பணியாளர்களுக்கும் முகக் கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)

# ஆயுதப் போராட்டத்தை நிராகரிக்கும் சுமந்திரன் குறித்து எச்சரிக்கை தேவை!

## தமிழ் மக்களிடம் கோருகின்றார் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர்

**யாழ்ப்பாணம், மே 17**

**தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தை நிராகரிப்போர் எவரதும் அரசியல் குறித்தும் தமிழ் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் வலியுறுத்தியுள்ளார்.**



அவர் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

சிங்கள ஊடகவியலாளருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அண்மையில் வழங்கிய செவ்வி தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சட்ட ஆலோசகராக இயங்கியவன் என்ற வகையிலும், நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் என்ற வகையிலும் எதிர்வினையாற்றுவது அவசியம் என உணர்கிறேன்.

சுமந்திரன் 2010 ஆண்டில் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் நுழைந்த காலத்தில் இருந்தே தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வலுவிழந்துபோகச் செய்யக்கூடிய பல்வேறு வகையிலான செயற்பாடுகளைச் மேற்கொண்டுவருகின்றதொரு பின்னணியிலேயே இவர் வழங்கிய செவ்வியையும் நாம் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

மேலும் இச் செவ்வியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றம் உட்பட பல்வேறு குளறுபடியான தகவல்கள் உள்ளதனையும் கவனிக்க வேண்டியவர்களாக உள்ளோம். இது வரலாற்றைத் திருத்தியெழுதும் ஓர் ஆபத்து மிக்க முயற்சியாகவே எமக்குத் தென்படுகிறது.

இச்செவ்வியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் போராட்டச் செயற்பாட்டை சுமந்திரன் நிராகரித்திருக்கிறார். தமிழ் மக்களின் தேசிய அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லும் எந்தவொரு அரசியல் பிரதிநிதியும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமையில் நடைபெற்ற தமிழ் மக்களது ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டமானது இலங்கை அரசின் இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கும், அரச பயங்கரவாதத்துக்கும் எதிராக தமிழ் மக்கள் சர்வதேச சட்டங்கள், தார்மீகக் கோட்பாடுகளின் அடிப்படையில் வழங்கிய எதிர்வினை என்பதனைப் புரிந்து கொண்டும், ஏற்றுக் கொண்டும் செயற்படுவதுதான் அரசியல் அறமாக இருக்க முடியும். இங்கு தனிப்பட்ட கருத்து என்பதற்கு இடமேதுமில்லை. இதனை ஏற்றுக் கொள்ள முடியாவிடின் அவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொண்டு தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஊறு விளைவிக்காமல் இருப்பதே சிறந்தது.

மேலும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்கள், சுமந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராட்டச் செயற்பாட்டை நிராகரித்ததை அது தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடு அல்ல என்றும், அது அவரது தனிப்பட்ட நிலைப்பாடு எனவும் கூறியுள்ளதுடன் சுமந்திரனின் கூற்றுப்பற்றிக் கண்டனமும் தெரிவித்திருக்கின்றனர். கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக உறுப்பினர் எவரும் செயற்படும்போது அதற்குரிய ஒழுங்கு நடவடிக்கையெடுக்கப்பட்டு அதன் விளைவுகளை அவ் உறுப்பினர் எதிர்கொள்ள வேண்டுமே தவிர, அவ்வாறு செய்யாது 'கட்சிக்கும் அதற்கும் தொடர்பில்லை' என மட்டும் கூறுவது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகவே இருக்க முடியும்.

இன்று தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ளாததிற்கான காரணம் சர்வதேச சட்டங்களுக்கோ அன்றி தார்மீகக் கோட்பாடுகளுக்கோ அது முரணானது என்பதால் அல்ல. மாறாக இன்றைய உலக ஒழுங்கில் அதற்கான சாத்தியங்கள் குறைவு என்ற காரணத்தினால் தமிழ் மக்கள் பூகோள ராஜதந்திர நடவடிக்கைகள் மூலமாகவும், சர்வதேச சட்டங்களை உரியவகையில் கையாளுதல் மூலமாகவும், உலகத் தமிழ் மக்கள் பலத்தின் ஊடாகவும் தமது போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள்.

இறுதியாக, தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தினை நிராகரிப்போர் எவரதும் அரசியல் குறித்து தமிழ்மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியுள்ளதையும் இவ்விடத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்- என்றுள்ளது. (ஓ,5)

# ஓராண்டாகியும் நடவடிக்கை இல்லை

## மன்னிப்புச் சபை விசனம்

கொழும்பு, மே 17

முஸ்லிம்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் இடம்பெற்று சுமார் ஒருவருடம் கடந்திருக்கும் நிலையில், அந்தத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்துவது அரசின் கடமையென சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியிருக்கிறது.

கடந்த வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களைத் தொடர்ந்து முஸ்லிம்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், பள்ளிவாசல்கள் மீது பரவலாகத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

கடந்த ஆண்டு மே 13 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 14 ஆம் திகதி முஸ்லிம்கள் மீதான இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடைய அமித் வீரசிங்க கைதுசெய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

தாக்குதல்கள் இடம்பெற்று சுமார் ஒரு வருடம் கடந்திருக்கும் நிலையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

'சிறுபான்மை மக்கள் உள்ளடங்கலாக இயலுமை குறைந்தவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு உள்ளது. அவர்களுக்கு எவ்வித கெடுதல்களும் ஏற்படுவதைத் தடுக்கும் அதேவேளை, கடந்த வருடம் முஸ்லிம்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதும் முக்கியமானதாகும்' என்று மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ஓ,5)



# 511 கடற்படை சிப்பாய்கள் கொரோனாவால் பாதிப்பு!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 17

இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களில் 511 பேர் கடற்படை சிப்பாய்கள் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நேற்றிரவு தெரிவித்தார். அதேவேளை, அவர்களுடன் நெருக்கமாகப் பழகிய 35 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடற்படையினருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்ட வரலாறு தெரியும் என்றபடியால் அது தொடர்பில் எவரும் அச்சமடையத் தேவையில்லை எனவும் அவர் மேலும் கூறினார். (ஓ,5,22)

# மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள பணிகள் புதனன்று ஆரம்பம்

கொழும்பு, மே 17

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நடவடிக்கைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை முதல் சில வரையறைகளுடன் மீண்டும் ஆரம்பிக்கப் படவுள்ளன.

ஊரடங்கு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திணைக்களத்தின் அனைத்து சேவைகளையும் குறிப்பிடத்தக்களவு ஆளணியை ஈடுபடுத்தி, சிற்சில வரையறைகளுடன் மீள ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சுமித். சி.கே.அழகக்கோன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனப் பதிவு, சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், வாகன இலக்கத் தகடுகளை வழங்குதல், வாகனங்களைப் பரிசோதித்து அறிக்கைகளை வழங்குதல் உள்ளிட்ட திணைக்களத்தின் சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

சேவை பெறுநர்கள் வார நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தொடர்பை ஏற்படுத்தி திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, திணைக்களத்தின் ஒரு நாள் சேவையும் மீள அறிவிக்கப்படும் வரை நடைமுறைப்படுத்தப்படமாட்டாது.

ஊரடங்கு நடைமுறையிலிருந்த காலப்பகுதிக்கு சலுகைக் காலமொன்று வழங்கப்பட்டுள்ளதால், அநாவசிய நெரிசல்களைத் தவிர்த்து அரசால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளையும் பின்பற்றி பொறுப்புடன் செயற்படுமாறு சேவை பெறுநர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திகதியை ஒதுக்கிக்கொள்ளும்போது அரசால் அறிவிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் அடிப்படையில் உரிய திகதிகளை ஒதுக்கிக்கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தால் திகதியொன்று ஒதுக்கப்படுதல் ஊரடங்கு நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் போக்குவரத்தை மேற்கொள்வதற்கான அனுமதி என கருதக்கூடாது எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ,5)

# மற்றுமொரு இடைக்கால கணக்கறிக்கை தயாராகிறது!

## சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாகவே நடக்கின்றதாம்

**கொழும்பு, மே 17**

**எதிர்வரும் ஜூன் மாதம் முதல் 4 மாதங்களுக்கு, அரச செலவினங்கள் தொடர்பில் இடைக்கால கணக்கறிக்கை ஒன்றூடாக, ஜனாதிபதிக்கு பணத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.**

நிதி அமைச்சு அது குறித்த இடைக்கால கணக்கறிக்கை ஒன்றினை தயாரித்து வருவதாக அறிய முடிகின்றது. அரசமைப்பின் அதிகாரங்களுக்கு அமைவாக, சட்டமா அதிபரின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு இந்நடவடிக்கைகள் இடம்பெறுவதாக நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன. நாட்டில் வரவு - செலவுத் திட்டம் இல்லாத, தற்போதைய சூழலை ஒத்த தேர்தல் காலகட்டத்தில் அத்தியவசியமான அரச செலவினங்களை ஈடுசெய்ய, இடைக்கால கணக்கறிக்கையைத் தயாரித்து செலவு செய்யவும், நாடாளுமன்றம் மீளக்கூடியதும், அதனைச் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கௌ்வதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாக கருதப்படும் நிலையில், அதன்படி நிதி அமைச்சு இடைக்கால கணக்கறிக்கையை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (ஒ.5)

## வவுனியாவில்

# தீப்பற்றி எரிந்தது வர்த்தக நிலையம்!

வவுனியா, மே 17

வவுனியா சிறிஇராமபுரத்தில் அமைந்துள்ள பலசரக்கு விற்பனை நிலையம் நேற்று இரவு தீப்பிடித்து எரிந்துள்ளது.

வர்த்தக நிலையம் மூடப்பட்டிருந்தது. இந்த நிலையில் இரவு 8 மணியளவில் மூடப்பட்ட கடையில் இருந்து புகை வெளிக்கிளம்பியுள்ளது.

இதனை அவதானித்த சிலர் தீயை அணைக்க முற்பட்டதுடன் நகரசபையின் தீயணைப்பு பிரவினருக்கும் தகவல் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா நகரசபையின் தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். விபத்தில் வியாபார நிலையத்தில் இருந்த பெறுமதியான பொருள்கள் எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

# சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க தீர்மானம்

கொழும்பு, மே 17

எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து நாட்டிற்குள் சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாக இலங்கை சுற்றுலாத்துறை அறிவித்திருக்கிறது.

கொரோனா வைரஸ் பரவல் இலங்கையில் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இருப்பினும் இலங்கை தொடர்பான தோற்றப்பாட்டையும், நாட்டிற்குள் உள்ளீர்க்கும் சுற்று லாப் பயணிகளின் வரையறையையும் மாற்றியமைப்பதற்கான ஒரு வாய்ப்பாகவே நாம் இதனைக் கருதுகின்றோம் என்று இலங்கை சுற்றுலாத்துறையின் தலைவர் கிமாலி பெர்னாண்டோ வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருக்கிறார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் கூறியிருப்பதாவது: எதிர்வரும் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான முன்பதிவுகளை மேற்கொள்வதற்கான கோரிக்கைகள் அதிகரித்திருக்கின்றன.

எமது விமான நிலையங்கள் மீளத்திறக்கப்படும் திகதி குறித்து ஜேர்மன் மற்றும் இந்திய நாடுகளின் சுற்றுலாத்துறை முகவர்கள் தொடர்ச்சியாக அக்கறை காண்பித்து வருகிறார்கள். இந்தியா, லண்டன், ஜேர்மன் மற்றும் சீனா ஆகிய நாடுகள் இலங்கையின் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான முக்கிய சந்தைகளாக உள்ளன- என்றார். (ஒ.5)

## ராஜபக்‌ஷக்களின்

# பழிவாங்கல்களுக்காக சிறை செல்லத் தயார்

## ரணில் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, மே 17

"ராஜபக்‌ஷாக்களின் திட்டமிட்ட அரசியல் பழிவாங்கலுக்காக சிறைச்சாலை செல்ல ஐக்கிய தேசியக் கட்சியினர் எந்நேரமும் தயாராகவுள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியினரிடம் சொல்லுங்கள். எனினும், நீதித்துறை தூங்கிக்கொண்டிருக்காது எனவும் அவர்களிடம் கூறுங்கள்" இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரம சிங்க, அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களிடம் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் முக்கிய உறுப்பினர்கள், கட்சியின் தலைவருடன் நேற்று தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடினர். இதன்போது, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம, ரவி கருணாநாயக்கா, ராஜித சேனாரத்ன, தலதா அத்துக்கோறளை, பி.ஹரிஸன் உட்பட முன்னைய நல்லாட்சி அரசின் 17 அமைச்சர்களுக்கு எதிராக நிதிக் குற்றவியல் பொலிஸ் பிரிவில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என பதில் பொலிஸ்மா அதிபர் தங்களிடம் உறுதியளித்திருக்கின்றார் என்று சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பகிரங்கமாகத் தெரிவித்துள்ள கருத்துக்களை ஐ.தே.கவின் முக்கியஸ்தர்கள் முன்வைத்தனர். இதற்குப் பதிலளிக்கும்போதே ரணில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ராஜபக்‌ஷக்கள் நினைத்த மாதிரி ராஜிதவை சிறைக்குள் தள்ளிவிட்டனர். எனினும், அவர் தற்போது விளக்கமறியலில்தான் வைக்கப்பட்டுள்ளார். இனி ஐ.தே.கவிலுள்ள சிலரையும் அவர்கள் சிறைவைக்கக்கூடும். பொதுத் தேர்தலுக்காக அவர்கள் என்னவும் செய்யக் கூடும். ஆனால், நாம் பயந்து ஒளியும் கூட்டம் அல்ல. எல்லாவற்றுக்கும் நீதிமன்றமும் நாட்டும் மக்களும் ஒரு முடிவு கட்டுவர். எனவே, நாம் எதற்கும் அஞ்சாது இருப்போம் - என்றார். (ஒ.5,22)

# 5 லட்சம்பேர் வேலையிழப்பர்

கொழும்பு, மே 17

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் காரணமாக பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பால் தனியார் துறையில் தொழில் புரியும் 5 லட்சம் பேர் தமது தொழில்களை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்கி இருப்பதாக தொழில் திணைக்களத்தின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தொழில் இழப்பு மற்றும் வேறு காரணங்கள் சம்பந்தமாகக் கொழும்பு நாராஹென்பிட்டியில் உள்ள தொழில் திணைக்களம் மற்றும் மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களுக்கு ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார். சம்பளம் செலுத்தப்படாமை, சம்பளத்தை குறைத்துள்ளமை மற்றும் வேலைகளில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக கூறப்படுகிறது. (ஒ.5)

# ஐ.நா. பயங்கரவாதத் தடைக் குழுவின் வழிகாட்டியில் இலங்கையும் உள்ளடக்கம்

கொழும்பு, மே 17

தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டம் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அதேவேளை, உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாகவுமே இடம்பெறுவதை உறுதி செய்யும் வகையில் இலங்கை உள்ளிட்ட சார்க் அங்கத்துவ நாடுகளை உள்ளடக்கி, ஒரு வழிகாட்டியை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பயங்கரவாதத் தடைக் குழு தயாரித்து வருகிறது.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

சுதந்திரம், நியாயத்துவம் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த அறிவு என்பன முறையானதொரு நீதித்துறைக்கு, குறிப்பாக தீவிரவாதம் சார்ந்த வழக்குகளில் மிகவும் அவசியமானவையாகும்.

எனினும் பல நாடுகள் இவ்விடயத்தில் சிக்கல்களை எதிர்கொள்கின்றன. இந்தச் சவால்களுக்குத் தீர்வை வழங்கும் விதமாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பயங்கரவாதத் தடைக் குழு சார்க் நாடுகளின் பணியாற்றும் நீதிபதிகளின் பங்களிப்புடன், 'நீதிபதிகளுக்கான தெற்காசியப் பிராந்திய வழிகாட்டிகளை' தயாரித்திருக்கிறது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டிருக்கும் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான ஜேர்மனிய தூதுவர் ஜோன் ரொஹ்டே, தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டம் என்பது மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அதேவேளை, உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாகவுமே இடம்பெற வேண்டும். இந்தக் காரணங்களுக்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையால் வழிகாட்டிகள் தயாரிக்கப்படும் திட்டத்தை ஆதரிக்கிறோம், எனக் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# ஐ.தே.கவுடன் இணைவது எப்போதும் சாத்தியமற்றது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

**கொழும்பு, மே 17**

**ஐக்கிய தேசியக் கட்சியுடன் எதிர்காலத்தில் இணைவது என்பது சாத்தியமற்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தங்கள் ஆதரவாளர்கள் மற்றும் வாக்காளர்கள் ஐ.தே.க.வுடன் இணைவதை விரும்பவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்கள் ரவி கருணாநாயக்க போன்றவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பற்றி சாதகமாக பேசுகிறார்கள். அழைப்பு விடுக்கப்பட்டால் அவர்களுடன் இணைவது குறித்து பரிசீலிப்பேன்.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை தோற்கடிப்பதே.

நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முற்றிலும் எதிரானவர்கள் அல்ல. ஆனால் தற்போது அதன் தலைமைத்துவத்துடன் இணைந்து பணியாற்ற விரும்பவில்லை. கொரோனா வைரஸிற்கு எதிரான செயன்முறையில் அரசாங்கம் கையாண்ட விதம் தொடர்பாக இன்னும் சந்தேகம் உள்ளது.

தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கம் தற்போது மும்முரம் காட்டி வருகின்றது ஆனால் இந்த நோயை எதிர்த்துப் பணியாற்றிய சுகாதார வல்லுநர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் ஒப்புதலுடன் மட்டுமே இது நடத்தப்பட முடியும்- என்றார். (எ)

# திருமணத்தை நடத்த நிபந்தனைகள் விதிப்பு

கொழும்பு, மே 17

திருமண நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படும் என்று சுகாதார சேவைப் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விதிமுறைகள் எதிர்வரும் காலங்களில் அறிவிக்கப்படும். கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக தனிநபர் இடைவெளியைப் பின்பற்றும் நோக்குடன் ஒன்று கூடும் நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் முக்கிய சமூக நிகழ்வுகளை நடத்துவற்கு விதிமுறைகள் வெளியிடப்படவுள்ளன. குறிப்பாக திருமண நிகழ்வு தொடர்பில் கவனம் கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க)

# கசிப்பு உற்பத்தி இருவர் கைது

வவுனியா, மே 17

வவுனியா தவசிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 50 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-110)



# முகக் கவசத்தை கழுத்தில் அணிவதால் பயனில்லை!

## *சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்து*

தென்மராட்சி,மே 17

மூக்கும், வாயும் தெரியும் வகையில் முகக் கவசத்தை கழுத்தில் அணிவதால் கொரோனாத் தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது. உங்களையும் உங்கள் குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாக்க கட்டாயம் சுகாதார நடைமுறைகளை விரும்பிக் கடைப்பிடியுங்கள்

இவ்வாறு பருத்தித்துறை பொது சுகாதார பரிசோதகர் பிரிவு 2 இன் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

மந்திகை சந்தைப்பகுதியில் மரக்கறி மற்றும் பழவகை வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளுக்கான கோவிட்19 தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு புலோலி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனாத் தொற்று யாரிடம் இருக்கிறது என்று தோற்றத்தை வைத்து



இனங்காண முடியாது. படித்தவர்களும் பெரிய பதவிகளிலுள்ளவர்களும் கழுத்தில் முகக் கவசத்தை அணிந்து கொண்டு மூக்கு மற்றும் வாய் வெளித் தெரியும் வகையில் வீதிகளில் நடமாடுகின்றனர். இது தவறான உதாரணமாகும். அதை நீங்கள் பின்பற்றாதீர்கள். சரியான விதத்தில் முகக் கவசத்தை அணிவதும் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுவதும் நபர்களிடையே மூன்றடி இடைவெளியைப் பேணுவதும் மிக முக்கியமானதாகும். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாக்க கட்டாயம் சுகாதார நடைமுறைகளை விரும்பிக் கடைப்பிடியுங்கள்- என்றார். (ஐ-9)

# ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது

சாவகச்சேரி. மே. 17

சட்டவிரோத போதைப்பொருள்களான கஞ்சா மற்றும் ஹெரோய்ன்போதைப்பொருள் போன்றவற்றை உடைமையின் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 5 ஆயிரம் மில்லிகிராம் மற்றும் ஆயிரத்து 200 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில்வைத்திருந்தனர் என இருவரும் 130 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்தார் என ஒருவரும் இவ்வாறு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். (ப-9)

# தேர்தலுக்கான வழிகாட்டல் தயாரிக்க குழு

கொழும்பு, மே 17

சுகாதாரப் பாதுகாப்புடன் தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பதைத் தீர்மானிக்க, அது தொடர்பிலான வழிகாட்டல்களைத் தயாரிக்க மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க இந்தக் குழுவை நியமித்துள்ளார். சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்பு குறித்த விசேட நிபுணத்துவம் கொண்ட அதிகாரி ஒருவரையும் உள்ளடக்கியதாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (க)

# 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே 17

நாட்டில் தொடர்ந்து வரும் அதிக மழையுடனான வானிலை காரணமாக 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை, காலி, மாத்தளை, குருணாகலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலி மாவட்டத்தின் நாகொட, பத்தேகம, அக்மீமன, எல்பிட்டிய, நியகம மற்றும் போத்தல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின், எஹெலியகொட, குருவிட்ட,கிரியெல்ல, அஹங்கம, கலவான, நிவித்திகல, எலபாத்த, இரத்தினபுரி மற்றும் பெல்மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று களுத்துறை மாவட்டத்தின், அகலவத்த, பாலிந்த நுவர,புலத்சிங்கல, வலல்லவிட்ட, ஹொரன, இங்கிரிய மற்றும் மதுகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், மாத்தறை மாவட்டத்தின், பிட்டபெத்தர மற்றும் கொடபொல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், கொழும்பு மாவட்டத்தின் சீதாவாக்க பிரதேச செயலாளர் பிரிவுக்கும், கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட, யட்டியாந்தோட்ட மற்றும் தெரணியகலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்- என்றுள்ளது. (க)

# ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்த முயற்சி

## சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 17

**ரணில் ராஜபக்ச தரப்பினர் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக எத்தனை வழக்குகள் தொடரப்பட்டாலும் எமது கட்சிக்கு எந்தச் சிக்கலும் இல்லை.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐக்கிய மக்கள் சக்தி நீதியான முறையிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியை தேர்தல்கள் ஆணையகமும் வழங்கியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க, ராஜகஷக்களுடன் கொண்டுள்ள டீல் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் எமது கட்சியின் சட்டச் சிக்கல் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். எந்தவித வழக்கை தோடர்ந்தும் எம்மைப் பலவீனப்படுத்த முடியாது.

நாட்டிலுள்ள சிறந்த ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்மோடு இணைந்துள்ளனர். அதனால் எந்த வழக்கையும் நாங்கள் இலகுவில் வெற்றி கொள்வோம். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் இல்லாத நிலையில், எமது கட்சி தொடர்பில் பரப்புரையை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் ரணில் தரப்பினர்களினாலேயே எமக்கு பெரும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. தற்போது அந்த குழுவினர் எம்மை விட்டு விலகிச் சென்றுள்ளதால் எமக்கு சுயாதீனமாக செயற்பட முடியும். ராஜபக்சக்களுக்கு சவால் ஏற்படுத்தும் ஆளுமை எம்மிடம் உள்ளது. யாருடைய எதிர்ப்புகளையும் கண்டு அச்சம் கொள்ள மாட்டோம். பொதுத் தேர்தலை நடத்துதல் தொடர்பில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையில் நாடு இல்லை.

அரசாங்கம் அரசியலமைப்பை மீறி செயற்படுவதைக் கண்டும் நாங்கள் எந்தவித எதிர்ப்பும் காட்டாமல்இருப்பதற்கான காரணம் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை தடுப்பதற்காக அரசாங்கம் எவ்வாறான முயற்சிகளை எடுத்தாலும், அதற்கு இடையூறு விளைவிக்கக்கூடாது என்பதற்காகவே. அரசியலமைப்பை மீறி நிதி ஒதுக்கீடு, கடன் பெறுதல் மற்றும் நாணய அச்சிடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நாங்கள் அமைதிகாத்து வருகின்றோம்.

கொரோனாவின் நிழலில் தேர்தலை வெற்றி கொள்ள முயற்சிக்கும் அரச தரப்பினர், மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை விடுத்து தேர்தல் தொடர்பிலே அக்கறை செலுத்தி வருகின்றனர்- என்றார். (எ)

# இன்று மின்தடை

யாழ்ப்பாணம், மே 17

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரியகுளத்தில் இருந்து முட்டாசுக்கடை சந்தி வரை,மணிக்கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, ராஜா திரையரங்கு, வெலிங்டன் சந்தி, பெரியகடை வீதி, பழைய தபாற்கந்தோர் வீதி, ஸ்ரான்லி வீதி, லிங்கம் கீறின் கவுஸ், சிறிநதியா நகை மாளிகை, றொப்பாஸ், அன்னைநாகா பூட் சிற்றி, சிவ ராதா, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம் ஓஎல்சி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

இதேவேளை இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீச்சரம் வரை,வங்காலை பிரதேசம், சீனத்துறை முகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# மணல் அகழ்வு, கசிப்பு உற்பத்தி தருமபுரத்தில் அதிகரிப்பு

கிளிநொச்சி, மே 17

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கனை ஈச்சமோட்டைப் பகுதியில், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 டிப்பர்களும் அதன் சாரதிகளும் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை ஊழவனூர் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவரும், கல்மடு இரட்டைப்பனை குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவருமாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 85 லீற்றர் கசிப்பும் , ஆயிரத்து 250 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் 5 பேரும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (ஐ-113)

# தனிமைப்படுத்தலை மீறியவருக்கு தண்டம்

கொழும்பு, மே 17

சுய தனிமைப்படுத்தலின் நிபந்தனைகளை மீறிய நபருக்கு, காலி மேலதிக நீதவானால் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சுற்றுலா பயண சிற்றூர்திச் சாரதி ஒருவருக்கே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. இவர் காலி, ஹிருபுர, படுவகே பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



# வர்த்தக நிலையங்களில் சுகாதார சோதனைகள்

வவுனியா, மே 17

வவுனியா மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களின் சுகாதார நடைமுறைகள் தொடர்பில் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், மாவட்டச் செயலகம் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கொவிட்19 பரவலைக் கட்டுப்படுத்தும் துரித நடவடிக்கையின் ஒரு கட்டமாக வவுனியாவில் உள்ள புடவை நிலையங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள், உணவகங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள், வங்கிகள் ஆகியன சோதனை செய்யப்பட்டன.

முக்கியமாக கைகழுவும் இடம், சமூக இடைவெளி பேணல், முகக் கவசம் அணிதல், வேலையாள்களின் நிலை என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத வர்த்த நிலையங்களை மறு அறிவித்தல்வரை மூடுவதற்கும் இதன்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஐ-18)

# ரயில் சேவைகளை அதிகரிக்க முடிவு!

கொழும்பு, மே 17

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 20 நாளாந்த ரயில் சேவைகள் நாளை திங்கட்கிழமை முதல் மேலும் அதிகரிக்கப்படவுள்ளது என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. அடுத்த வாரத்துக்கான ரயில் சேவை நேர அட்டவணையைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ரயில் போக்குவரத்து அதிகாரி காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார். ரயிலில் பயணிப்பதற்காக சிறப்பு அனுமதிப் பத்திரத்தைக் கோரி 11 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் ரயில் திணைக்களத் துக்கு இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்துள்ளனர்.

தற்போது நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 338 பஸ்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பணிகளுக்காகப் பிரவேசிக்கும் பொதுமக்களுக்காக இந்தப் போக்குரத்து வசதி முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள் ளார். அதேவேளை, பேருந்துகளில் பொதுமக்கள் பயணிக்கும்போது கொரோனா வைரஸில் இருந்து பாதுகாத்து கொள்ளல் மற்றும் ஏற்படக்கூடிய இடர்கள் தொடர்பில் அறிவியல் ரீதியான தெளிவூட்டல்களை வழங்குமாறு பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீரவால் போக்குவரத்து துறை தொடர்பான நிபுணர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (எ)

# தாக்குதலில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, மே 17

இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்கான 47 வயதுக் குடும்பத்தார் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கெற்பேலி மேற்கில் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா கேதீஸ்வரன்(வயது 47) என்னும் குடும்பத்தர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ப-9)

# மயான வீதி சீரமைப்பு

முல்லைத்தீவு, மே 17

வட்டக்கச்சி வட்டாரத்தில் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாதிருந்த கட்சன் வீதிக்கும் ஆறுமுகம் வீதிக்கும் இடைப்பட்ட மயானம் செல்லும் வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வட்டக்கச்சி வட்டாரத்தில் 2020 வருட பாதீட்டில் வீதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. (ப-222)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)

- சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## உதயன் பயிற்சிப் பரீட்சை – 3

### பகுதி– II

ஆக்கம்: த.தயானந்தன்
அதிபர்
யா/கீரிமலை நகுலேஸ்வரா வித்தி.

நேரம்: 1 மணி 15 நிமிடம் பெயர்: .............................. . பாடசாலை: ...............................................

**1) பின்வரும் பந்தியை நன்றாக வாசித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடையினை தெரிந்து எழுதுக**

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கிராமங்களில் விறகு அடுப்புக்கள் தான் அதிகம். விறகு அடுப்புக்களில் பல வகை உண்டு. பெரும்பாலான பகுதிகளில் பிரதான வீட்டிலிருந்து ஒதுங்கிய அடுப்படி இருக்கும். ஒரு புறத்தில் வைக்கும் அடுப்பு இரண்டு பாத்திரங்கள் வைக்கும் அடுப்பு உண்டு. இரட்டை அடுப்புக்குச் சில பகுதிகளில் "கொடியடுப்பு"என்று பெயர் உண்டு. மழைக்காலங்களில் விறகு கிடைக்காத சந்தர்ப்பங்களில் நம் முன்னோர் விறகை அரை குறையாக எரித்து கரியாக மாற்றி அதனைப் பயன்படுத்தினர்.

i) கிராமங்களில் எவ்வகையான அடுப்பு பயன்படுத்தப்பட்டது?

.................................................................................................

ii)இரட்டையடுப்புக்கு வழங்கப்படும் இன்னொரு பெயர் என்ன?

.................................................................................................

iii) பந்தியில் வந்துள்ள இணை மொழியினைத் தருக?

.................................................................................................

iv) வருடம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?

.................................................................................................

v) நம் முன்னோர்கள் மழைக் காலங்களில் விறகிற்குப் பதிலாக எதனை பயன் படுத்தினர்?

.................................................................................... (5புள்ளிகள்)

**2) உயர்திணை, ஒருமை, ஆண்பால் பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

மனிதன், சிறுவர், ஆண், சிங்கம், சிறுவன் (1புள்ளிகள்)

3)கீழே தரப்பட்டுள்ள பழமொழியை ஒழுங்குபடுத்தி எழுதுக.

திரண்டால் / அடம்பன் / மிடுக்கு / கொடியும்

.................................................................................... (1புள்ளிகள்)

**4) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக**

i) நம்பமுடியாத கதை .......................................................

ii ) வீண் செலவு செய்பவர் .......................................................

iii) ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் ..........................................

iv) தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் ...................................................

(1/2 x 4 = 2புள்ளிகள்)

**5) பின்வரும் வாக்கியங்களை மீண்டும் எழுதி பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக**

i) உனக்கு சிலந்தியைப் பற்றி தெரியுமா

.................................................................................................

ii) ஐயோ விழுந்துவிட்டதே

.................................................................................... (2 புள்ளிகள்)

**6) கீழே தரப்பட்டுள்ள சொற்கள் இரண்டு சொற்களினால் ஆக்கப்பட்டவை. அவற்றில் முதல் எழுத்துக்களை மாற்றுவதன் மூலம் சரியான சொல்லை ஆக்கலாம். சரியான சொல்லை ஆக்கி புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i) காடி கரம் .......................................................................

ii) மொய் தாழி ....................................................... (2புள்ளிகள்)

**07) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

i) மிளகாய்ச் செடி செளித்து வலர்ந்தது.

.................................................................................................

ii) நான் மனல் வீடு கட்டினேன்.

.................................................................................... (2 புள்ளிகள்)

**08) வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

i) சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களை ..........................................

(போன்றது / போன்றன)

ii) கழிவு நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் ..........................................

(பெருகுகின்றது / பெருகுகின்றன) (2புள்ளிகள்)

**09) கீழே தரப்பட்டுள்ள இறந்த கால வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக**

i) நாங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றோம்

.................................................................................... . (1 புள்ளி)

**10) பின்வரும் பிராணியின் இளமைப் பெயரை எழுதுக.**



i) யானை ...................................................................... (1புள்ளி)

**11) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக**

i) Bread .............................. ii) Aeroplane ....................

(1புள்ளி)

**12) பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

i)  ....................  ....................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக**

i) animal / this / what / is ....................................................

ii) many / cats / are / how / there / now ..........................................

(2புள்ளிகள்)


**14) "தும்ரிய ஸ்தானய" எனும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக**

.................................................................................... (1புள்ளிகள்)

**15)பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

"எனக்கு தண்ணீர் வேண்டாம்"

.................................................................................... ... (1புள்ளிகள்)

16) 


வட்டத்திலுள்ள நான்கு இலக்கங்களையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக.

.................................................................................................


17) 9999 எனும் எண்ணை சொற்களில் எழுதுக

.................................................................................................

18) பின்வரும் எண்களுள் 5 எனும் இலக்கத்தினால் காட்டப்படும் பெறுமானம் 500 ஆகவுள்ள எண் யாது?


8250, 5028, 6573, 1457 .......................................................

19) கீழ் காட்டப்பட்டுள்ள கோலின் நீளம் யாது?




....................

20) கீழே தரப்பட்டுள்ள சதுரத்திற்கு சமச்சீர் கோடுகள் வரைக.



21) A,B,C,D எனும் நான்கு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட யோகட் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.


| நிறுவனம் | யோகட்களின் எண்ணிக்கை |
|---|---|
| A | 1346 |
| B | 2435 |
| C | 1652 |
| D | 3490 |

i)A,B ஆகிய நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த யோகட்களின் எண்ணிக்கை யாது?

..................................................


ii)A யைவிட D நிறுவனம் எத்தனை யோகட்களை கூடுதலாக உற்பத்தி செய்துள்ளது?

.................................................................................................



22) உருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக.

..................................................................



23) கடிகார முகத்தில் காட்டப்படும் நேரத்தை எழுதுக
.....................................................................................

24) கடை யொன்றில் காலையில் 3kg 600g சீனியும் மாலையில் 2kg 700gசீனியும் விற்கப்பட்டன. விற்கப்பட்ட சீனியின் மொத்த நிறை யாது?
.....................................................................................


25) ரூபா 45வீதம் 5 நிறப்பெட்டிகள் வாங்கிக்கொண்டு கடைக்காரருக்கு ரூபா 100 தாள்கள் மூன்றினைக் கொடுத்தால் கிடைக்கும் மீதப்பணம் எவ்வளவு?
.....................................................................................

26) ஒரு லீற்றர் பானத்தை ஒவ்வொன்றும் 275 ml அளவான 3 குவளைகளில் இடும்போது எஞ்சியிருக்கும் அளவு யாது?
.....................................................................................

27) ஒரு குழியில் 2 மிளகாய் நாற்றுகள் வீதம் 12 குழிகளில் நடுவதற்குத் தேவையான நாற்றுக்களின் எண்ணிக்கை யாது?
.....................................................................................

28)ஒருவருக்கு 3 கொய்யாப்பழங்கள் வீதம் 102கொய்யாப்பழங்களை எத்தனை பேருக்குப் பகிர்ந்தளிக்கலாம்?
.....................................................................................

29) மாணவர்கள் குழுவொன்று விரும்பும் உணவுகள் பற்றிய தகவல் வரைவில் காட்டப்பட்டுள்ளது.




i) பிட்டு உண்ண விரும்பும் மாணவர்களைவிட தோசை விரும்புவோர் எத்தனை பேர் குறைவாகும்?
.............................................

ii) தோசையை விரும்பும் மாணவர்களில் இரு மடங்கு ரொட்டி உண்ண விரும்புகின்றனர். அதனை வரைபில் காட்டுக.
.................... (14x2=28புள்ளிகள்)

30) சுற்றாடலிலுள்ள பொது இடம் அல்லாதது
1. சிறைச்சாலை 2.நூல் நிலையம்
3. வைத்தியசாலை 4. பேருந்து நிலையம்

31) இலங்கையின் தேசியக் கொடியை நிர்மாணித்தவர்
1. S.M செனவிரத்ன 2. S.Pசாள்ஸ் 3. மு.நல்லதம்பி 4. ய.அமரதேவா

32) இலங்கையில் தேசிய இலட்சினையை வடிவமைத்தவர் யார்?
1. ய.அமரதேவா 2. S.M செனவிரத்ன
3. கேணல் ஒல்கொட் 3. S.M. சாள்ஸ்

33) தாவரத் தண்டுகளில் பூக்கள் பூக்கும் தாவரம் எது?
1. விளிம்பி 2. மரமுந்திரிகை 3. மாமரம் 4. பலா

34) ஔடதப்பானம் தயாரிக்க பயன்படும் பூ வகை எது?
1. வில்வம் பூ 2. தென்னம் பூ 3. முருங்கைப் பூ 3. வேப்பம் பூ

35) தும்பு,காய்ந்த இலைகள் போன்றவற்றை பயன்படுத்தி அழகிய கூடு கட்டும் பறவை எது?
1. தச்சன் குருவி 2.தையற் குருவி 3. தூக்கணங்குருவி 4. செண்பகம்.

36) பூக்களிலிருந்து காய்களும்,பழங்களும் தோன்றுவதற்கு உதவும் பிராணி எது?
1. கறையான் 2. சிவப்பெறுப்பு 3. வெட்டுக்கிளி 4. தேனீ

37) இலங்கைக்கேயுரித்தான வண்ணத்துப் பூச்சியினம் எது?
1. அழகிய சொர்க்கம் 2. பொன் வண்ண வண்ணாத்தி
3. கொம்பு ஓணான் 3. சென்னிற வண்ணத்துப் பூச்சி

38) ஆழமற்ற நீர் நிலைகளில் மீன் பிடிக்க பயன்படும் உபகரணம் எது?
1. அத்தாங்கு 2. பறி 3. நங்கூரம் 3. சவள்

39) வெண்கலப் பாத்திரங்களைக் கழுவிச் சுத்தமாக்கப் பயன்படும் உபகரணம் எது?
1.சுட்ட உமி 2. சவர்க்காரம் 3. பழப்புளி 4. சலவைத்தூள்

40) அருகிலுள்ள படத்தினால் குறித்து காட்டப்படுவது?
1. நனையக் கூடியது 2. உடையக்கூடியது
3. பாதுகாப்பாக கையாளவும் 4. இந்தப் பக்கம் கவனம்



41) இலைக்கஞ்சி தயாரிக்கப் பயன்படும் மூலிகை தாவரம் அல்லாதது எது?
1. தூதுவளை 2. சாத்தாவாரி 3. வல்லாரை 4. சிறுபுல்லடி

42) குற்றச் செயல்கள் சந்தேகத்திற்கு இடமான பொருள்கள் என்பவற்றைக் கண்டால் அறிவிக்க வேண்டி தொலைபேசி எண்ண எது?
1. 119 2. 1929 3. 1955 4.1960

43) அதிகளவு செயற்கை நிறமூட்டி,செயற்கை சுவையூட்டி அடங்கிய உணவு வகைகளை அதிகளவு உண்பதால் ஏற்படும் நோய் எது?
1. தொண்டைக்கரப்பான் 2.களலை 3. புற்றுநோய் 4. இருதய நோய்

44) இலங்கையில் அதிகளவு தொற்று நோய்களைப் பரப்பும் நோய்க்காவி எது?
1. கரப்பான் 2. இலையான் 3. நுளம்பு 4. எலி

45) நுளம்புகளிலிருந்து பாதுகாப்புப் பெற உடலில் பூசும் எண்ணெய் வகை
1. எள் எண்ணெய் 2. தேங்காய் எண்ணெய்
3. காவட்டம்புல் எண்ணெய் 4. ஒலிவ் எண்ணெய்

46) அசுத்த நீரைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்?
1. செங்கண்மாரி 2. மலேரியா 3. சொறி 4. சிக்கன் குன்யா

47. கண்டி- யாழ்ப்பாணம் ஆகிய இரு பிரதான நகரங்களை இணைக்கும் பாதை?
1. A1 2. A9 3.A12 4.A5

48) இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது அதிவேக நெடுஞ்சாலை எது?
1. தெற்கு அதிவேக நெடுஞ்சாலை 2. கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை
3. வடக்கு அதிவேக நெடுஞ்சொலை 4. மாத்தளை நெடுஞ்சாலை.

49) பின்வரும் எந்த உணவைச் சமைக்கும் போது மூடியைத் திறந்து சமைக்க வேண்டும்.
1. கடலை 2. ஈரப்பலா 3. மரவள்ளி 4. வற்றாளை

50) வீடுகளுக்கு ஒளியூட்டப் பயன்படும் மிகக் குறைந்த மின்னோற்றத்தை தரக்கூடியதுமான மின்குமிழ் வகை
1. இழை மின்விளக்கு 2. CFLமின்விள்கக
3. LED மின்விளக்கு 4.பு ளோரொளிர்வு மின்குமிழ்

51.) மின்காந்தம் காணப்படும் உபகரணம் எது?
1.வானொலி 2. மின்மானி 3. செவிப்பண்ணி 4.திசைகாட்டி

52) ஊசித் துளைக் கமராவில் தோன்றும் விம்பத்தின் இயல்பு
1.பெரிய விம்பம் 2. தலைகீழான விம்பம்
3.நிமிர்ந்த விம்பம் 4. கிடையான விம்பம்

53) காற்று வீசும் திசையை அறிவது
1. காற்றுத் திசைகாட்டி 2. காற்றுவேகமானி
3.காற்றுவலுகாட்டி 4. காற்றுக் கிண்ணமானி

54) இலங்கையில் வடமத்திய மாகாணத்தில் காணப்படும் மாவட்டம்
1. புத்தளம் 2.காலி 3. குருநாகல் 4.பொலன்னறுவை

55) கதிர்காம புனிதநகர் அமைந்துள்ள மாகாணம்
1. சப்ரகமுவ மாகாணம் 2.மேல் மாகாணம்
3.மத்திய மாகாணம் 4. ஊவா மாகாணம்

56) புரதான மனிதன் தொடர்பாடலுக்கு பயன்படுத்திய பிராணி
1. புறா 2. அன்னம் 3. சேவல் 4. மாடு

57) காசியப்ப மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட உலகப்புகழ் பெற்ற கலைப் படைப்பு
1. இசுறுமுனிய காதலர் சிற்பம் 2.சிகிரியா ஓவியம்
3. காலிக்கோட்டை 4. தூபாராம

58) Wireless World எனும் சஞ்சிகையில் வெளியிட்ட கட்டுரையில் பிரபல்யமடைந்தவர்
1.வணஎஸ்.மகிந்த 2. C.W.W.கன்னங்கரா
2. ஆதர் சி கிளார்க் 4.T.P.ஜாயா

59) பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டு அல்லாதது
1. பல்லாங்குழி 2.சடுகுடு 3. பாண்டியாட்டம் 4. எல்லே
(30 புள்ளிகள்)

60)நான் பார்த்து இரசித்த கடற்கரைக் காட்சி எனும் தலைப்பில் 6 சொற்களுக்கு குறையாமல் மூன்று வாக்கியங்கள் எழுதுக?
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# பெரும்துயர் துடைக்கும் கொடையாளர்கள்



நாவற்குழிப் பகுதியில் வசிக்கும் 47 கர்ப்பிணிகளுக்கு மாமனிதர் ரவிராஜ் குடும்பமும் தாய் தேசம் அறக்கட்டளையும் இணைந்து சத்துமா பொதிகளை வழங்கியுள்ளன. (ம)





சாந்திகம் உளவளத்துணையின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு கோம்பாவில் கிராமத்தில் வசிக்கும் வறுமைக் குட்பட்ட 100 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



கிழக்கு மாவட்ட புற்றுநோய் பராமரிப்பு நல்வாழ்வு அமைப்பின் வேண்டுகோளுக்கு அமைய, புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் ஏறாவூர் சுகாதார பணிமனை அலுவலக பிரிவை சேர்ந்த 51 நோயாளர்களுக்கு புலம்பெயர் உறவுகளால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)





சுவிஸ் ரவியின் முயற்சியில் ‘சுவிஸ் ராகங்கள்’ இசையமைப்பாளர்களால் அல்லைப்பிட்டிப் பகுதியில் வாழும் குழந்தைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)




நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையால் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் வைத்து வறுமைக்குட்பட்ட 156 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-422)





திருகோணமலை சாரணர் குடும்பங்களுக்கு திருகோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதம குருக்கள் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திர குருக்களால் உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)



எழுதுமட்டுவாழ் மக்கள் ஒன்றியத்தின் சார்பாக கனடாவில் வசிக்கும் குலசேகரம்பிள்ளை சிவராஜா என்பவரின் நிதி உதவியில் 196 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





கொட்டியாரப்பற்று சர்வதேச ஒன்றியத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டம், வெருகல் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 650 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

# பெரும்துயர் துடைக்கும் கொடையாளர்கள்









புதுக்குடியிருப்பு வள்ளிபுனம், தேவிபுரம் பகுதிகளில் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள 50 குடும்பங்களுக்கு சுசீலன் பௌண்டேசனால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)




பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கிவரும் எதிர்காலத்துக்கான பாதை எனும் பிரித்தானிய தமிழ் தொண்டு நிறுவனம் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், சிறப்புத் தேவையுடைய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளது. (ம)





வவுனியாவில் இயங்கும் நீதிக்கான மக்கள் அமைப்பு எனும் தொண்டு நிறுவனம் 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளது. (ம)





யாழ் மாவட்டத்தின் கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இருபாலை கிழக்கு மடத்தடிக் கிராமத்தில், கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன் 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



வெசாக் தினத்தை முன்னிட்டு இரணைமடு விமானப் படையினரின் நிதிப் பங்களிப்பில் அந்தப் பகுதி மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





வன்னி தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தால் 40 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம)



ஜனநாயக மக்கள் முன்னணியால் கண்டி மாவட்டத்தில் பல குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம)

10 லட்சம் பேரைக் கொண்ட

# ரொஹிங்யர் முகாமில் பரவியது கொரோனா!

## அச்சத்தில் பங்களாதேஷ்

**டாக்கா, மே 17**

**10 லட்சம் சனத்தொகையுடன் உலகின் மிகப் பெரிய அகதிமுகாமாக அறியப்படும் பங்களாதேஷின் ரொஹிங்ய முகாமில் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**



பங்களாதேஷில் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருக்கும் அகதி முகாம்கள்.

குறித்த முகாமில் மிக நெருக்கமாக மக்கள் வசிப்பதாலும், அவர்களுக்கு கொரோனா தொடர்பில் போதிய விழிப்புணர்வு இல்லாததாலும் அந்த முகாமில் கொரோனா இலகுவில் சமூகப் பரவலடையும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. மியன்மாரில் ரொஹிங்ய மக்களுக்கு எதிராக அந்த நாட்டு இராணுவத்தால் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டதை அடுத்து சுமார் 10 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குள் அடைக்கலம் புகுந்துள்ளனர். அவர்களின் பராமரிப்புச் செலவுகளை பங்களாதேஷ் அரசுடன் இணைந்து ஐ.நா சபையும் பொறுப்பேற்றுள்ளது. மிகமிக நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள குடிசைகளுக்குள் அவர்கள் அனைவரும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அவர்களில் இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ரொஹிங்ய முகாமில் சமூக இடைவெளி என்பது இம்மியும் சாத்தியம் இல்லாதது. இதனால் விரைவில் கொரோனா அங்கு சமூகப் பரவலடையும் என்று கருதப்படுகின்றது. 10 லட்சம் ரொஹிங்யர்களுக்கும் விரைவில் பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம)

கொரோனா தடுப்பூசி

## குரங்குகளுக்கு சோதித்ததில் முன்னேற்றம்!

லண்டன், மே 17

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் கொரோனாவுக்கு தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் வகையில் குரங்குகளுக்கு நடத்தப்பட்ட சோதனை வெற்றிபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 லட்சத்துக்கும் அதிகமானவர்களைக் காவுகொண்டுள்ள கொரோனா வைரஸுக்கு தடுப்பூசியைக் கண்டுபிடிக்க உலகின் பல்வேறு நாடுகள் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியது.

அந்தப் பல்கலைக் கழகம் தயாரித்த தடுப்பூசியொன்றை குரங்குகளுக்கு சோதித்துப் பார்த்ததில் அந்த முயற்சி வெற்றிபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## சீனாவின் அன்பளிப்பை கைவிடுகின்றது கனடா!

ஒட்டாவா, மே 17

கனடாவுக்கு சீனாவின் அன்பளிப்பான இரண்டு பண்டா கரடிகளை கனடா அரசு திரும்பவும் சீனாவுக்கே அனுப்ப முடிவெடுத்துள்ளது. 2014ஆம் ஆண்டு சீனா - கனடா அரசுகளின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரண்டு பண்டாக் கரடிகள் சீனாவால் கனடாவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. இவை ஒவ்வொருநாளும் சராசரியாக 40 கிலோ மூங்கில்களை உணவாக எடுத்துக் கொள்கின்றன. அவற்றுக்குச் சீனாவில் இருந்து மூங்கில்கள் கொண்டு செல்லப்பட்டன. தற்போது ஊரடங்கு உத்தரவுகள் நடைமுறையில் உள்ளதால் பண்டாக்களுக்கான உணவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே அவற்றை சீனாவுக்கு திருப்பிஅனுப்ப கனடா முடிவெடுத்துள்ளது. (ம)

## உலக சுகாதார நிறுவனத்துக்கு எதிரான நடவடிக்கை ஆரம்பம்!!

*அடுத்த வாரம் அறிவிப்பேன் என்கிறார் அதிபர் ட்ரம்ப்*

வொஷிங்டன், மே 17

உலக சுகாதார நிறுவனத்துக்கு எதிரான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகும். என்ன நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

இது தொடர்பில் ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:

உலக சுகாதார நிறுவனத்துக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது. என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது தொடர்பில் அடுத்த வாரம் அறிவிப்பேன் - என்றார். (ம)

## கொரோனாவுக்கு இதுவரை எந்த மருந்தும் கிடையாது

*உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை*

லண்டன், மே 17

கொரோனா வைரஸுக்கு ஏராளமான சிகிச்சைகள் நடைமுறையில் உள்ளன. ஆனால் இதில் எதையும் இன்னும் முறையான சிகிச்சையாக அங்கீகரிக்கவில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உலகச் சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

'நூற்றுக்கணக்கில் மருத்துவ சோதனைகள் நடந்து வருகின்றன. இந்த மருந்துகள் எப்படி வேலைசெய்யும் என்பதைத் தெள்ளத் தெளிவாக அறியக் காத்திருக்கிறோம். அதாவது கண்டுபிடிக்கப்படும் மருந்துகள் கொரோனா தீவிர நிலைக்கு தீர்வாக அமைகின்றதா? எப்படித் தடுக்கிறது? மரணத்தை தடுக்கிறதா?, பாதுகாப்பானதா?, பக்கவிளைவுகள் உண்டா? என்ற ரீதியில் முடிவுகளுக்காக காத்திருக்கிறோம்.

எந்த சிகிச்சை கொரோனாவுக்கு பதிலாக அமையும் என்பதைத் தீர்மானிக்க சில காலம் பிடிக்கும், இப்போதைக்கு அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மருந்துகள் இல்லை' என்றுள்ளது. (ம)

## கொரோனாவுக்கு மருந்து அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

வொஷிங்டன், மே 17

கொரோனா வைரஸைத் தடுக்கக் கூடிய மருந்து அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் கலிபோர்ணியாவில் இயங்கும் சோரெண்டோ நிறுவனமொன்றே தம்மால் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள் ளது.

இது தொடர்பில் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:



ஒரு சிகிச்சை இருக்கிறது என்பதை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். இது 100 சதவீதம் வேலை செய்யும். தீர்வு இருக்கிறது. கொரோனா வைரஸை இந்த மருந்து சுற்றி வளைக்கிறது. இது வைரஸைச் சுற்றிக் கொண்டு அவற்றை உடலில் இருந்து வெளியேற்றும். ஒரு வைர ஸ் மனித உயிரணுக்களில் நுழைவதைத் தடுக்கும் போது, வைரஸ் உயிர்வாழ முடியாது. வைரஸ் செல்லுக்குள் செல்ல முடியாவிட்டால், அதனால் நகலெடுக்க முடியாது. ஆகவே, வைரஸ் உயிரணுக்களைப் பெறுவதைத் தடுத்தால், வைரஸ் இறுதியில் இறந்துவிடும். உடல் அந்த வைரஸை வெளியேற்றுகிறது. அமெரிக்க அரசின் ஒப்புதலுக்காக துரிதகதியில் செயற்பட்டு வருகின்றோம் - என்றுள்ளது. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.